# மெய்யான மகிழ்ச்சி

# உங்களுடையதாகலாம்

பதிப்புரிமை : © 2002, by DENSU®

First English Edition, 2000, USA.

First Tamil Edition, 2002, October.

Copies : **5,000.**

**SOUTH ASIA CO-ORDINATOR**
**DenSu MInistries**
P.O. BOX No.: 969,
PERAMBUR BARRACKS,
CHENNAI - 600 012.
E-mail: southasia@densu.com

# உண்மையான சந்தோஷம் - மெய்யான மகிழ்ச்சி

## அத்தியாயம் - ஒன்று



*உண்மையான சந்தோஷத்தை நாம் அனைவரும் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம். நாம் எந்த நாட்டை சார்ந்தவராயிருப்பினும், குலம், வயது, பாலினம், சமுதாயம், மதம் மற்றும் கல்வியறிவு உள்ளவராயிருந்தாலும் அனைவரும் உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்க விரும்புகிறோம்.*

*உண்மையான சந்தோஷத்தை பெற்றுக்கொள் என்ற பொதுவான விருப்பத்தில் நாம் பகிர்ந்து கொள்ளும் விருப்பத்தில் உண்மை என்னவெனில் ஆகவே நமது வாழ்வின் மிக முக்கியமான நமது பார்வைக்கு சரியான, உண்மையான சந்தோஷத்தை பெற்றுக்கொள்ள அன்றாடம் தேடும் தேவை.*

*இன்றைய உலகின் பல்வேறு காரியங்கள் நமக்கு உண்மையான சந்தோஷத்தை கொண்டு வரும் பொருட்டு எதையும் நமக்கு அளிக்க தயாராக உள்ளது. ஆனால் நமது வாழ்க்கையின் தரத்தைக் குறித்த உண்மையை அறிந்து கொண்டால் நாம்*



*உண்மையான சந்தோஷத்தை பெறவில்லை என்று ஒத்துக்கொள்ள வேண்டும். ஏதோ ஒன்று நமது வாழ்வில் இன்றும் குறைவாக உள்ளது.*

*நீங்கள் யாராயிருப்பினும் உங்களுக்கு உண்மையான சந்தோஷமுள்ள வாழ்க்கை உண்டாக வேண்டுமென்றுதான் இந்நூலை எழுதியுள்ள ஆசிரியர்கள் விரும்புகிறார்கள். அதைத்தான் இந்நூலின் மூலம் உங்களோடு பகிர்ந்தும் கொள்கிறார்கள்.*

### மெய்யான மகிழ்ச்சி உங்களுடையதாகலாம்.........

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார். எல்லாம் நன்றாக இருந்தது. பூமி மிகவும் அதிசயமான பரதீசாக இருந்தது. தேவன் தமது சாயலின் படியும் ரூபத்தின்படியும் மனிதனையும் மனுஷியையும் சிருஷ்டித்து அதில் வைத்தார்.

சிருஷ்டிகளுடன் இணைந்து அவர்கள் ஒரு ஆசீர்வாதமான வாழ்க்கை நடத்தினார்கள். எல்லா ஜீவராசிகள் மீதும் அவர்களுக்கு ஆளுகை செய்யும் அதிகாரத்தைக் கொடுத்து பூமியில் பலுகி பெருகி, ஆண்டுகொண்டு பூமியை நிரப்புங்கள் என்றார். எல்லா மிருகங்களுக்கும் பெயர் வைக்கும் அளவில் சகல பொறுப்புகளையும் அவர்களிடம் ஒப்படைத்தார்.

ஏதேன் தோட்டம் அவர்களுடைய வீடும் பரதீசுமாக இருந்தது. ‘ஏதேன்’ என்ற சொல்லிற்கு “மகிழ்ச்சி” அல்லது “மன மகிழ்ச்சி” என்று பொருள். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தன்னை படைத்த சிருஷ்டிகரோடும் எல்லா சிருஷ்டிகளோடும் நல்ல ஐக்கிய உறவு காணப்பட்டது. அங்கு பாவமில்லை, வியாதியில்லை, சண்டை யில்லை, குறைவில்லை, மரணமுமில்லை. இதுதான் இன்றும் தேவனுடைய திட்டமாகும்!

பூமியில் இதுவரை யாருக்கும் கிடைத்திராத ஒரு அற்புதமான வாழ்க்கையை ஆதாமும் ஏவாளும் வாழ்ந்தனர். இதுவும்கூட முழு மனுக்குலத்துக்குமுரிய தேவனுடைய திட்டமாயிருந்தது. அவர்களை உண்மையான சந்தோஷத்திற்குள்ளாக்கும் எல்லா வசதிகளையும் கர்த்தர் கொடுத்திருந்தார். ஆனால் அவர்களுடைய சந்தோஷத்தைக் காண்பதற்கு தேவன் அவர்களுக்கு ஒரு விதிவிலக்கை வைத்தார்.

***"நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம். அதைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள்"*** என்றார்.

இங்கு தங்கள் விருப்பத்தின்படி ஒன்றை தெரிந்தெடுக்கக் கூடிய விருப்பத்தை கர்த்தர் கொடுத்தார். அவர்களை நம்பி மரியாதையுடன் தமது ஐக்கியத்தை ஏற்படுத்தினார். அவர்கள் மரிப்பதை தேவன் விரும்பாததினால் அந்த மரத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்றார். அவர்கள் தேவனை நம்பாததினால் பின்வருமாறு வஞ்சிக்கப்பட்டார்கள் :

***"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி, நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளை புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன் : நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.***

***அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருக்கக் கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். அப்பொழுது அவர்களுடைய இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது. அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தி இலைகளை தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள். பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்திலே உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். கர்த்தர் ஆதாமை கூப்பிட்டு, "நீ எங்கே இருக்கிறாய்" என்றார்.***

***அதற்கு அவன் நான் தேவரீருடைய சத்தத்தை தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளிந்து கொண்டேன் என்றான். அப்பொழுது அவர், நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ***



***என்றார். அதற்கு ஆதாம் என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்கு கொடுத்தாள். நான் புசித்தேன் என்றார். கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, நீ இப்படிச் செய்தது என்ன? என்றார். ஸ்திரீயானவள், சர்ப்பம் என்னை வஞ்சித்தது. நான் புசித்தேன் என்றாள்."***

ஆதாம் மற்றும் ஏவாளின் பாவத்தின் விளைவாக அவர்கள் தங்கள் சிருஷ்டிகரை நம்பாமலும் அவருடைய வார்த்தையை கேளாமலும் அன்றும் இன்றுமுள்ள மனுக்குலத்திற்கு மாபெரும் நாசத்தை விளைவித்தார்கள். இவர்களுடைய பாவத்தின் பலன் உலகத்தை பாவத்திற்குள் கொண்டு வந்தது மட்டுமின்றி இவர்களுடைய கீழ்படியாமையினால் மனுக்குலம் தேவனை விட்டு பிரிந்து சென்றது. தீமைகளும், சுயநலமும், வியாதிகளும், மரணமும் அவர்களுடைய பாவத்தின் விளைவாக மனுக்குலத்தை பாதித்தது.

சிருஷ்டிகராகிய தேவனை நம்புவதைவிட ஆதாமும் ஏவாளும் பிசாசு, சாத்தான் மற்றும் சர்ப்பத்தையும் அவனுடைய வார்த்தைகளையும் நம்பினார்கள். இதன் விளைவாக சாத்தான் மனுக்குலத்தின் மீது ஆளுகைச் செய்ய துவங்கினான். இந்த சர்ப்பத்தின் மீதும் சகல சிருஷ்டிகள் மீதும் ஆளுகைச் செய்யும் படிக்கு தேவனால் சகல அதிகாரமும் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்கப்பட்டது. ஆனால் அதை சரியான முறையில் பயன்படுத்தாமல் சாத்தானுக்கு அடிமைகளானார்கள்.

தேவன் திட்டமிட்டிருந்தபடி பூமியிலுள்ள வாழ்க்கை மனுக்குலத்திற்கு பொருத்தமாக அமையவில்லை. தேவனுடைய ஆசீர்வாதங்கள் நிரம்பி வழிவதற்கு பதிலாக வெறுமையான வாழ்க்கை அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டது. உலகத்திற்குள் பாவம் பிரவேசித்ததின் விளைவாக மனிதன் தேவனை விட்டுப் பிரிந்துவிட்டான். இதனால் சாத்தான் எழும்பி மனிதர்களுக்கு வெறுமையும், குழப்பத்தையும், பிரச்சனைகளையும் ஏற்படுத்தினான். இதன் விளைவாக தான் மனிதர்கள் கீழ்த்தரமான வாழ்வையும், சுயநலத்தையும், வியாதி, பயம், மரணம், தரித்திரம், தற்கொலை, கொலை செய்தல், பாலுணர்வின் பாவம், விவாகரத்து, போதை மருந்துகளுக்கு அடிமையாகுதல், மதுபானங்களை குடித்தல் மற்றும் சமுதாயத்தின் பல்வேறு தீமைகளுக்கும் அடிமையானான்.

இன்று அறியாமையினாலும் சாத்தானின் வஞ்சகத் திட்டத்தினாலும் அநேக மக்கள் தேவனை குறை கூறுகிறார்கள். மேலும் தங்கள் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளினாலும், குறைவுகளினாலும், உலகத்தின் நிலைமையினாலும் தேவனை குறை

கூறுகிறார்கள். உண்மையான பிரச்சனைகளை புரிந்து கொள்ளாமலும் அதற்குரிய பரிகாரத்தை காணாமலும் மனுக்குலம் முன்னேறிச் செல்ல பல்வேறு வழிகளை கண்டுபிடித்து முயற்சித்து இறுதியில் தோல்வியும் மரணத்தையும் நித்திய நியாயத் தீர்ப்பையும் அடைகிறார்கள்.

இதனால் வெற்றி அடைய முடியாத மக்கள் அனுதினமும் தங்களை நிரப்பக்கூடிய காரியங்களை தேடிச் செல்கிறார்கள். பொழுதுபோக்குகள், உலக சிற்றின்பங்கள், பாலுணர்வுகள், போதை மருந்துகள், மதுபானங்கள், விளையாட்டுகள், உறவுகள் மற்றும் மதங்கள் அனைத்தும் தேவன் வடிவமைத்த உறவை புதுப்பிக்கவும் அந்த ஐக்கியம் அளிக்கும் மகிழ்ச்சியையும் அளிக்க தவறிவிட்டது. சாத்தானும் இந்த உலகமும் தற்காலிக இன்பத்தை அறிந்தாலும் இறுதியில் வேதனையையும் வெறுமையும் தான் அளிக்கின்றன.

தேவனுடைய சாயலின்படியும் ரூபத்தின்படியும் மனிதனை தேவன் சிருஷ்டித்து நேசித்தார். மனிதன் பாவஞ்செய்து தேவனை விட்டு பிரிந்து சென்றபோதிலும் அவனை நேசித்தார். அவருடைய அன்பு மாறாமலிருப்பதுபோல தேவன் தமது வார்த்தையையும் பிரமாணங்களையும் ஒருபோதும் மீறாமலிருந்தார். இல்லாவிட்டால் அவருடைய வார்த்தையை நாம் நம்ப முடியாது. ஆகவே மனிதனின் பிரச்சனைக்கு ஒரு பரிகாரத்தை தேவன் கண்டுபிடித்தார். இதனால் மனிதன் தான் இழந்துபோன ஐக்கியத்தை புதுப்பித்துக்கொண்டு பழைய சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் தேவன் அளித்துள்ள அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டு இந்த பூமியில் உண்மையாகவும் தேவனுடைய வார்த்தைக்கு நேர்மையாகவும் வாழ்வதற்கு வழி வகுத்தார்.

தேவனுடைய நீதி திருப்தி அடைய வேண்டும். மனிதனின் பாவமும், கீழ்ப்படியாமையும் தண்டிக்கப்பட வேண்டும். பாவத்தின் தண்டனை மரணமாயிருந்தாலும், ஆவிக்குரிய மரணமும், தேவனை விட்டு பிரிந்து செல்லும் காரியமும் காணப்பட்டது. இந்த காரணத்தினால் மனிதர்கள் பாவத்தில் மரித்து நரகத்திற்கு சென்று, நித்தியமாய் தேவனை விட்டுப் பிரிந்து சாத்தானுக்கும், பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் நரகத்திற்குள் செல்கிறார்கள்.

ஆனால் மனுக்குலத்தை தேவன் முற்றிலும் அழித்துவிடாமல் அவர்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுடன் ஒப்புரவாகுவதற்கும் ஐக்கியப்படுவதற்கும் அவருடைய தீர்மானத்தின்படி ஒரு வழியை திறந்தார். பாவத்திலிருந்து நம்மை மீட்பதற்கும் சாத்தானின் பிடிகளிலிருந்து நம்மை விடுதலையாக்குவதற்கும் ஒரு வழியை ஆயத்தம் பண்ணினார். இதை தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் செய்து முடித்தார்.



“தேவன் தமது ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரை (இயேசுவை) தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். இஸ்ரவேல் நாட்டிலுள்ள பெத்லேகேமில் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் பிறந்தார். மரியாள் என்றும் கன்னிகை இயேசுவின் தாயாக இருந்தாள். பரிசுத்த ஆவியானவர் மரியாளுக்குள் நிழலிட்டு கர்ப்பம் தரித்து பரிசுத்த குழந்தையாகிய இயேசுவை பிறக்கச் செய்தார்.

இயேசுவின் பிறப்பும் அவருடைய ஊழியங்களைக் குறித்து தீர்க்கதரிசிகளால் எல்லாம் இன்று நிறைவேறியுள்ளது. இயேசு மனிதர்களின் தயவிலும் தேவனுடைய கிருபையிலும் அதிகமாய் வளர்ந்தார். மூன்றரை ஆண்டுகள் இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்து முடித்துவிட்டு பரலோகத்திற்கு தமது பிதாவிடம் சென்றார்.

இயேசு மற்றுள்ள எல்லா மனிதர்களைவிட முற்றிலும் வித்தியாசமாயிருந்தார். அவருக்கு பூமிக்குரிய தகப்பன் இருந்ததில்லை. அவர் ஆதாமின் இரத்த சம்பந்தத்தில் பிறக்கவில்லை. ஆதாமும் ஏவாளும் ஆதியிலே சோதிக்கப்பட்டது போல இயேசு சோதிக்கப்பட்டாலும் தேவன் தமது தசப்பிறயிருந்தபடியால் இயேசு ஒருபோதும் பாவஞ்செய்யவில்லை. பிசாசின் எல்லா சோதனைகளையும், புரவாய்களையும் அவர் ஜெயித்தார். அவர் எப்பொழுதும் பிதாவுக்கு கீழ்படிந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார்.

ஆகவே தான் இயேசு மனுக்குலத்தை மீட்க முடிந்தது. மனிதனின் பிரச்சனைகளுக்கு இயேசு தேவனுடைய பரிகாரமாக இருந்தார். நமது பாவங்களுக்கு பதிலாக நம்மை தண்டிப்பதற்கு பதிலாக தேவன் இயேசுவை தண்டித்தார். பாவமில்லாத பரிபூரண மனிதனாகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்திற்காக தமது ஜீவனை பலியாக ஒப்புக்கொடுத்தார். 2000 ஆண்டுகளுக்கு முன்பாக தமது விலையேறப்பெற்ற இரத்தத்தை நமது பாவங்களுக்காக சிந்தினார்.

***"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை தேவன் பாவமாக்கினார்."*** நமது இடத்தில் அவர்

நமக்கு பதிலாக மரித்தார். அவர் நமது பாவங்களையும் வியாதிகளையும் சிலுவையில் தமது சரீரத்தில் சுமந்து நமக்கு நீதியையும் ஆரோக்கியத்தையும் பரிபூரண ஜீவனையும் அளித்தார். நமது தோல்வியை அவர் ஏற்றுக்கொண்டு அவருடைய வெற்றியை நமக்குத் தந்தார். தேவன் தீர்மானித்தபடியே நமக்கு பரிபூரண ஜீவனை அருளும்படி அவர் நமக்காக மரித்தார்.

***"நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார். அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள்."***

இயேசு கிறிஸ்து பிசாசின் கிரியைகளையும் மரணம், பாவம், வியாதிகள் மற்றும் எல்லா நோய்களையும் மேற்கொண்டார். அவர் என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறார். இதை அவர் முழு உலகத்தாருக்காகவும் செய்து முடித்தார். அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட எல்லாருக்காகவும் அவர் தமது ஜீவனைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். ஆகவே ***"கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்."***

இந்நூலிலுள்ள எல்லா சத்தியங்களும் வேதாகமத்திலுள்ள சத்தியங்களை அடிப்படையாகக் கொண்டது. பரிசுத்த வேதாகமம் என்பது தேவனுடைய வெளிப்படுத்தல்களை எழுத்தளவில் மனிதனுக்கென்று எழுதி கொடுக்கப்பட்டுள்ளன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாம் எப்படி நம்மை பாவத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்று தமது வார்த்தைகளை பத்திரமாக பாதுகாத்தார். இதனால் நாம் நமது இரட்சகரிடம் மனந்திரும்பி புதுப்பிக்கப்பட்டு அவருடன் ஒப்புரவாக்கப் பட்டிருக்கிறோம்.

இயேசு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிலுவையில் நமது பாவங்களுக்காக மரித்தார் என்ற நற்செய்தியை இப்பொழுது வாசித்தீர்கள். நித்திய நியாயத்தீர்ப்பினால் நீங்களும் நானும் நித்திய நரகத்திற்குள் செல்லாதபடிக்கு உங்களுக்காக அவர் தண்டிக்கப் பட்டார். நீங்கள் செய்த பாவம் அவர் தமது ஜீவனை கடனாக செலுத்த வேண்டியிருந்தது. அந்த கடனை முற்றிலுமாக அவர் செலுத்திவிட்டார். அவர் உங்களை நேசிக்கிறபடியால் தமது ஜீவனை



அவர் பலியாக செலுத்தினார். தேவனால் நீங்கள் முற்றிலும் அன்பு கூறப்பட்டீர்கள்.

தேவன் தமது ஒரே பேரான குமாரனை உங்களுக்காக மரிக்கும்படி அளித்தார் என்ற செய்தியை கேள்விப்பட்ட நீங்கள் எப்படி அவருக்கு இணங்கி செயல்பட்டீர்கள்? நீங்கள் நித்திய ஜீவனைப் பெறும்படி அவர் உங்களுக்காக தமது அன்பை அளித்தார் என்ற செய்தியை கேள்விப்பட்ட நீங்கள் எவ்வாறு செயல்பட்டீர்கள்? இப்பொழுது அந்த இயேசுவை குறித்து உங்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பரிசுத்த ஆவியானவருக்கு நீங்கள் எப்படி கீழ்படிகிறீர்கள்? உங்களுக்கு இரண்டு விருப்பங்கள் உள்ளன.

நீங்கள் விசுவாசத்தில் கீழ்படிந்து சுவிசேஷத்தை விசுவாசிக்கலாம். அல்லது கீழ்படியாமல் இயேசுவைக் குறித்த சுவிசேஷத்தை புறக்கணித்துவிடலாம். தமது ஜீவனை உங்களுக்கு அளித்த தேவ குமாரனை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளலாம். இல்லையெனில் அவர் அளித்த எல்லா வரங்களையும் புறக்கணித்துவிடலாம். தேவனுடைய மன்னிப்பை ஏற்றுக்கொண்டு சிருஷ்டிகராகிய தேவனிடம் நீங்கள் ஒப்புரவாகலாம். அல்லது உங்கள் பாவங்களில் நித்தியமாக மரித்து கிடக்கலாம். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு அவரை நோக்கிக் கூப்பிடலாம். அல்லது தேவனின்றி நம்பிக்கை இழந்து வாழலாம்.

நீங்கள் தேவனுடைய குமாரனாகிய இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆனால் ஆதாம் ஏவாளைப்போல் உங்கள் சந்தேகத்தில் நிலைத்திருக்கும்படி சாத்தான் விரும்புகிறான். நீங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்களாயிக்கும்படி தேவன் விரும்புகிறார். ஆனால் சாத்தானோ நீங்கள் சபிக்கப்பட்டவர்களாயிருக்கும்படி விரும்புகிறான்.

நீங்கள் பாவத்தின் அடிமைத்தனத்திலிருக்கும்படி சாத்தான் விரும்புகிறான். ஆனால் தேவனோ நீங்கள் பாவத்தின் விளைவுகளிலிருந்து விடுதலையாக்கப்படும்படி விரும்புகிறார். தேவன் நீங்கள் பரிபூரண தெய்வீக ஆரோக்கியத்தில் வாழும்படி விரும்புகிறார். ஆனால் சாத்தானோ நீங்கள் கடும் வியாதியில் அகப்பட்டு நோயாளியாக இருக்கும்படி விரும்புகிறான். தேவன் ஜீவாதிபதி. ஆனால் சாத்தானோ சாபத்தின் மூலகாரணமானவன். நீங்கள் பரலோக வாழ்வை நித்தியமாக அனுபவிக்கும்படி தேவன் விரும்புகிறார். ஆனால் சாத்தானோ நீங்கள் நித்தியமாய் நரகத்தில் வாழும்படி தொல்லை செய்கிறான்.

***"...இயேசு கிறிஸ்து நன்மைச் செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்."*** அவர் நோயாளிகளை குணமாக்கினார். குருடர்களை பார்வை அடையச் செய்தார். செவிடர்களை கேட்கச் செய்தார், ஊமையர்களை பேச வைத்தார். பொல்லாத அசுத்த ஆவிகளை விரட்டினார், மரித்தோரை உயிரோடெழுப்பினார். தொழு நோயாளிகளை குணமாக்கினார். முடவர்களை நடக்கச் செய்தார். அவரிடம் வந்த எல்லா நோயாளிகளையும் அவர் குணமாக்கினார். ***"பாவிகளை இரட்சிக்கவும் பிசாசின் கிரியைகளை அழிக்கவுமே மனுஷ குமாரன் வெளிப்பட்டார்."***

***இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்,*** 2000 ஆண்டுகளுக்கு முன்பு அவர் செய்த கிரியைகளை இன்றும் செய்து கொண்டிருக்கிறார். ***அவருடைய வாக்குத்தத்தங்கள் கிறிஸ்துவுக்குள் "ஆம்" என்றும் "ஆமென்" என்றும் இருக்கிறது. "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்"*** என்று அவர் உண்மையாகக் கூறி அப்படியே வாழ்ந்து காட்டினார். ***"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமலிருப்பான்"*** என்று இயேசு மேலும் கூறுகிறார்.

மேலும் வேதாகமம், ***"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் அவருடைய பிள்ளைகளாகும்படி அதிகாரங்கொடுத்தார்"*** என்று கூறுகிறது. ***"கர்த்தராகிய இயேசுவை உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்."*** ஆதலால் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்கிற எவனும் இரட்சிக்கப்படுவான்.

இப்பொழுது உங்கள் வாழ்வில் ஒரு முக்கிய தீர்மானத்தை நீங்கள் எடுக்க வேண்டும். இந்த இடத்தில் நீங்கள் தற்செயலாக வரவில்லை. தேவனுடைய அன்பு உங்களை இடத்தில் கொண்டு வந்திருக்கிறது. நீங்கள் இரட்சிக்கப்பட்டு புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுமாறு பரிசுத்த ஆவியானவர் உங்களை கிறிஸ்துவிடம் நெருங்கி அழைத்துச் செல்கிறார். இதனால் நீங்கள் சந்தோஷமும், சமாதானமும், பாதுகாப்பு, மகிழ்ச்சி, பரிபூரண ஜீவன் மற்றும் பரலோகத்தில் நித்திய ஜீவனையும் பெற முடியும்.

இன்னும் சாத்தானின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க நீங்கள் விரும்பினால் மீண்டும் இந்த அதிகாரத்தைப் படித்து நல்ல தீர்மானம் எடுங்கள். அல்லது உங்கள் வாழ்க்கை புதுப்பிக்கப்பட்டு புதிய



வாழ்க்கையை வாழ விரும்பினால் பின்வரும் ஜெபத்தை என்னுடன் இணைந்து ஜெபியுங்கள் :

*அன்புள்ள தேவனே,*

*உமது சாயலின்படியும் உமது ரூபத்தின் படியும் என்னை சிருஷ்டித்ததினால் உமக்கு நன்றி, என்னில் அன்பு கூர்ந்து உமது ஒரே பேரான குமாரனை எனக்கு தந்தபடியால் உமக்கு நன்றி, உமது குமாரனாகிய இயேசுவை அனுப்பி என்னை சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் விடுதலையாக்க இயேசு எனக்காக தமது இரத்தத்தை சிந்தினபடியால் உமக்கு நன்றி கூறுகிறேன்.*

*நான் இயேசு கிறிஸ்துவை என் ஆண்டவர் என்றும், இரட்சர் என்றும் விசுவாசித்து எனக்குள் அவர் வரும்படி எனது இருதயக் கதவை திறந்து கொடுக்கிறேன். நீர் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினீரென்று என் இருதயத்தில் விசுவாசித்து என் வாயினாலே அறிக்கை பண்ணுகிறேன். இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறாரென்று நான் விசுவாசிக்கிறேன். நான் இரட்சிக்கப்படுவதற்கு இயேசுவை இப்பொழுதே கூப்பிடுகிறேன்.*

*கர்த்தாவே எனது எல்லா பாவங்களையும் மன்னித்து இரட்சித்ததற்காக உமக்கு நன்றி. உமது அன்பினிமித்தம் எனது வாழ்க்கையை முற்றிலும் மாற்றிக்கொள்கிறேன். எனது வாழ்க்கை உமக்கும் மற்றவர்களுக்கென்றும் வாழ்வேன் என்று தீர்மானிக்கிறேன். நீர் மெய்யான தேவன் என்று நான் விசுவாசிக்கிறேன். இந்நேரம் முதல் கடந்த கால வாழ்க்கையை வாழாமல் உமது சித்தத்தின்படி வாழ தீர்மானிக்கிறேன். உமது வார்த்தைக்கு உம்மை அறிகிற அறிவிற்கும் விரோதமாக எழும்பும் எல்லாவற்றையும் விட்டுவிடுகிறேன்.*

*என்னை நீர் ஏற்றுக்கொண்டபடியினாலும் உமது பிள்ளையாக மாற்றினபடியாலும் பரிபூரண ஜீவனை எனக்கு அளித்தபடியினாலும் உமக்கு நன்றி கூறுகிறேன். உமது நித்திய ஜீவனுக்காகவும் நீர் எனது பரலோகப் பிதாவாகவும் இருப்பதால் உமக்கு நன்றி. உமது அன்பும் பாவ மன்னிப்பும் எனது அறிவிற்கு அப்பாற்பட்டது. அவைகளை எனது தாழ்மையுள்ள இருதயத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். உமது பிள்ளையாக என்றும் வாழ்வதற்கும் உம்முடன் ஐக்கியத்தில் வளருவதற்கும் விரும்புகிறேன்.*

*உமது வார்த்தையையும் உம்முடைய நிலைத்திருக்கும் உண்மையையும் ஒருபோதும் சந்தேகப்படமாட்டேன். நீர் சொன்ன படியே இருக்கிறதற்காகவும் சொன்னபடியே உமது வாக்குத்தத்தத்தை*

*நிறைவேற்றுகிறதையும் நம்புகிறேன். எனக்காக நீர் யாவற்றையும் செய்து முடித்தபடியால் உமக்கு நன்றி. நீர் சொன்னபடியே நான் இருக்கிறபடியாலும் உமது மூலம் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்பதையும் நம்புகிறேன்.*

*உமது பிள்ளையாக உமது குடும்பத்தில் இடம் பெறுகிறேன். உமக்கென்று வாழ புது வாழ்வை எனக்கு அளித்தபடியால் உமக்கு நன்றி. உமது பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பி, உமது வழிகளை எனக்கு போதியும், என்னை சரியான பாதையில் வழிநடத்தும். உமது சித்தத்தை நிறைவேற்றும் தைரியத்தை எனக்கு தாரும்.*

*சிலுவையில் எனது பாவம், வியாதி, மரணம் மற்றும் வேதனைகளை சுமந்தபடியால் உமக்கு நன்றி. நீர் எனக்கென்று சிந்தின இரத்தத்தினால் உமக்கென்று வாழும் கனம்பொருந்திய வாழ்க்கையை வாழ விரும்புகிறேன். நீர் இப்பொழுது எனக்குள் ஜீவித்துக் கொண்டிருப்பதால் உமக்கு நன்றி. இயேசுவே உம்மை விசுவாசிக்கிறேன்! ஆமென்!*

**எனது தீர்மானம்!**

*இயேசு கிறிஸ்துவை எனது இரட்சகரும் ஆண்டவருமாக ஏற்றுக் கொண்டிருப்பதை வானமும் பூமியும் கீழுள்ள யாவும் அறியக்கடவது. தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினாரென்று இருதயத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கை செய்கிறேன் :*

பெயர் : ............................................

தேதி : ............................................

நேரம் : ............................................

இடம் : ............................................

உங்கள் தீர்மானத்தை குறித்து எங்களுக்கு தெரியப்படுத்த உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

**SOUTH ASIA CO-ORDINATOR**
**DenSu Ministries**
P.O. BOX No.: 969,
PERAMBUR BARRACKS, CHENNAI - 600 012.
E-mail : southasia@densu.com



# அத்தியாயம் - இரண்டு



*உண்மையான மகிழ்ச்சி இப்பொழுது உங்களுக்குரியது! முதலாம் அதிகாரத்திலுள்ள ஜெபத்தை நீங்கள் உண்மையாக செய்திருந்தால் உங்களை சிருஷ்டித்த தேவனிடம் இயேசு கிறிஸ்துவின் மூலம் புதிய ஐக்கியமும் உறவும் காணப்படும்.*

*தேவன் உங்களுக்கென்று ஆயத்தம் செய்து வைத்துள்ள அற்புதமான வாழ்க்கையை கற்பனை செய்து பார்க்கவும்கூட உங்களால் முடியாது. இவ்வுலக வாழ்விலும் நித்தியத்திலும் இந்த வாழ்வின் சிறப்பு அம்சம் முடிவு பெறாமல் ஒவ்வொரு நாளும் மகிமையாக வளர்ந்து விருத்தியடையும்.*

*இரண்டாம் அதிகாரத்தில் இயேசுவுடன் ஆரம்பிக்கக் கூடிய புதிய வாழ்க்கையைக் குறித்து கூறப்பட்டுள்ளது. உங்கள் வாழ்வின் காரணங்களும் உங்கள் சிந்தனையும் முற்றிலும் மாற்றம் அடையும். நீங்கள் புதிய மனுஷன் என்றும் பழையவைகள் ஒழிந்துபோயின*

*எல்லாம் புதிதாயின என்றும் நீங்கள் கண்டறிவீர்கள். இவைகள் எல்லாம் தேவனிடமிருந்து வருகின்றன.*

*தோற்றுப்போன சாத்தானை முறியடிப்பது எவ்வாறு என்றும் இதன் மூலம் கற்றுக்கொள்வீர்கள். இயேசு இந்த பூமியில் பிசாசை ஜெயித்தவராக வாழ்ந்தார். அவருடைய பாடுகள், மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் பிசாசை முற்றிலும் ஜெயித்தார். பிசாசின் மீதுள்ள இயேசுவின் வெற்றியானது இப்பொழுது உங்களுக்குச் சொந்தம்!*

## உண்மையான சந்தோஷம் இப்பொழுது உங்களுக்குரியது....

இயேசுவின் சிந்தப்பட்ட இரத்தத்தின்மேல் விசுவாசம் வைத்து அவரை உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு சிருஷ்டிகராகிய தேவனிடம் திரும்பினபடியால் உங்களுக்கு நல் வாழ்த்துக்கள்! இது நீங்கள் செய்த முக்கியமான தீர்மானம்!

நீங்கள் இரட்சிக்கப்பட்ட நாள், தேதி, நேரம், இடம் போன்றவைகளை மறந்துவிடாமல் எழுதி வைக்கவும். இது உங்களுக்கும் சாத்தானுக்கும் நினைப்பூட்டும் நினைவுச் சின்னமாக இருக்கும்.

உங்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெற்று தேவனுடன் உங்கள் ஐக்கிய உறவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஆதாமும் ஏவாளும் பாவஞ்செய்வதற்கு முன்பு பிசாசின் மீது அதிகாரம் பெற்றிருந்தது போல உங்களுக்கும் சாத்தான் மீது அதிகாரம் உண்டு. ஆனால் இயேசுவின் மூலம் தேவனிடம் திரும்பி வரக்கூடாதபடிக்கு சாத்தான் உங்கள் மனதில் சந்தேகத்தை உருவாக்கமாட்டான் என்று அர்த்தமில்லை.

நீங்கள் இயேசுவுக்குள் எவ்வளவு வளர்ந்து முதிர்ச்சி அடைந்தாலும் சரி பிசாசு ஒருபோதும் மாறமாட்டான். பிசாசு திருடவும், கொல்லவும் அழிக்கவும் வருகிறான். இதைச் செய்வதற்கு அவன் பயம், பொய், குற்றச்சாட்டுகள், வஞ்சனை, ஒடுக்குதல்கள் மற்றும் ஆக்கினை தீர்ப்புகளைக் கொண்டு வருகிறான். அவன் “பொய்க்குப் பிதா” என்று அழைக்கப்படுகிறான். உங்கள் மீதுள்ள பிசாசின் வல்லமை முறியடிக்கப்பட்டது.

ஆனால் மாறாத தேவனாகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய வார்த்தையும் ஜீவனுள்ளதாய் என்றும் நிலைத்திருக்கிறது. ஆகவே பிசாசுக்கு பயப்பட தேவையில்லை. உங்கள் சிந்தைதான் உங்கள் போர்க்களம். தேவனிடமுள்ள ஐக்கியத்தை சீர்குலைக்க பிசாசு முயற்சி செய்வான்.



ஆதாமையும் ஏவாளையும் சந்தேகப்படுத்தி தேவனுக்கு கீழ்படியாமற்போகச் செய்து தேவனை விட்டு பிரிந்து போகச் செய்தான். இயேசு வனாந்திரத்தில் தேவனுடைய வார்த்தை மூலம் பிசாசை முறியடித்தது போல அவர்களும் முறியடித்திருக்கலாம். ஆதாமும் ஏவாளும் அல்ல, இயேசுதான் உங்கள் முன் மாதிரி. இப்பொழுது நாம் இயேசுவின் சோதனையைப் பற்றி பார்க்கலாம்.

***இயேசு பரிசுத்த ஆவியானவரால் நிறைந்தவராய் யோர்தானை விட்டு திரும்பி ஆவியானவராலே வனாந்திரத்திற்கு கொண்டு போகப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த நாட்கள் முடிந்த பின்பு அவருக்குப் பசி உண்டாயிற்று. அப்பொழுது பிசாசு, "நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்த கல் அப்பமாகும்படி சொல்லும்" என்றான்.***

***இயேசு பிரதியுத்தரமாக, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறது" என்றார். பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து, நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்.***

***அதற்கு இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார்.***

***அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்கு கொண்டுபோய், தேவாலயத்தின் உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் இங்கே இருந்து தாழ குதியும் "ஏனெனில் உம்மைக் காக்கும்படி தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்து கட்டளையிடுவார். உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்றும் எழுதியிருக்கிறது" என்றான்.***

***அதற்கு இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சைப் பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறதே" என்றார். பிசாசானவன் சோதனை காலம் முடிந்த பின்பு சில காலம் அவரை விட்டு விலகிப் போனான். பின்பு இயேசு, "ஆவியானவருடைய பெலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று."***

பிசாசு இயேசுவை சோதித்து அவர் தேவனுடன் வைத்திருந்த ஐக்கியத்திற்கு சந்தேகத்தை ஏற்படுத்தினான். ***"நீர் தேவனுடைய குமாரனேயானால்?"*** என்றான். அதற்கு அவர் ***"இப்படி எழுதியிருக்கிறதே"*** என்றார்.

பிசாசு இயேசுவை ஒவ்வொரு முறை சோதித்தபோதும் அவர் வெற்றிகரமாக சாத்தானை முறியடித்தார். பிசாசு நம்மை சோதிக்கும்போது அவனை முறியடிப்பதற்கு இயேசுவே சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். தேவனுடைய வார்த்தைக்கு முரண்பாடாக காரியங்கள் நடந்தாலும் அவருடைய வசனத்திற்கு பொருத்தமாக நாம் நடந்து கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் ஐக்கியமும் தேவன் மேலுள்ள விசுவாசத்தை அடிப்படையாக கொண்டுள்ளது. அவிசுவாசமும் அவநம்பிக்கையும் பாவத்திற்கு நேராக நம்மை வழிநடத்தி மனிதனை தேவனிடமிருந்து பிரித்துவிடுகிறது. ஆகவே தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைப்பதுதான் மனிதனை தேவனிடம் மீண்டும் உறவில் புதுப்பிக்கும்.

***"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். தேவனிடத்தில் சேருகிறவன் தேவன் உண்டென்றும் அவரைத் தேடுகிறவர்களுக்கு உண்மையாய் பலனளிக்கிறவரென்றும், விசுவாசிக்க வேண்டும்."*** தேவன் தமது வார்த்தையில் கூறியிருப்பதை நம்பி கீழ்படிவதே விசுவாசமாகும்.

பிசாசு பொய்யனானபடியால் அவன் சத்தியத்தை வெறுக்கிறான், பொய் சொல்லாத தேவனை அவன் வெறுக்கிறான். அவருக்குள் விசுவாசம் வைக்கிற அனைவரையும் பிசாசு வெறுக்கிறான். அவன் தேவனுடைய எதிரியானபடியால் சத்தியத்தை நேசிக்கிற மக்களை வெறுக்கிறான்.

ஆதாமும் ஏவாளும் சாத்தானால் சோதிக்கப்பட்டபோது தேவனையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்கவில்லை. அதற்கு பதிலாக பிசாசின் வார்த்தைகளை மட்டுமே நம்பினார்கள்.

இந்நூலின் முதல் அதிகாரத்தில் பாவத்திலிருந்து எப்படி நீங்கள் தேவனிடம் திரும்பிச் செல்ல முடியும் என்று பார்த்தோம். இதன் மூலம் சந்தோஷம், சமாதானம், மகிழ்ச்சி மற்றும் ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும்.

இந்த சத்தியங்கள் மீதுதான் உங்கள் விசுவாசமானது பதிந்திருக்க வேண்டும். உங்கள் உணர்வுகளையும் அறிவையும் நீங்கள்



நம்ப முடியாது. நீங்கள் தேவனுடைய வார்த்தையின்படி ஜீவிப்பதினால் மட்டுமே உங்கள் வாழ்வு புதுப்பிக்கப்பட்டிருக்கிறதென்று அறியவேண்டும்.

சாத்தான் உங்கள் மனதிற்குள் தேவனுடைய ஐக்கியத்தைக் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துவான். இதனால் உங்கள் உணர்வுகளும் அறிவும் உங்களுக்குள் சந்தேகத்தை ஏற்படுத்தும். உங்களுக்குள் வாழும் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து நினைப்பூட்டுவார். இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளைகளென்று பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார். தேவனுடைய வார்த்தையை நீங்கள் விசுவாசிக்க துவங்கும்போது சந்தேகங்களை பிசாசு கொண்டு வந்தாலும் சமாதானத்தின் தேவன் உங்களோடு இருக்கிறார்.

தேவன் அளித்துள்ள அதிகாரத்தை எப்படி பயன்படுத்துவது என்பது மிகவும் முக்கியமாகும். நீங்கள் தோல்வி அடையாமல் வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழ வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதற்கு தேவன் அளித்துள்ள ஆவிக்குரிய போராயுதங்களை நீங்கள் பயன்படுத்த வேண்டும். இயேசு உங்களுக்காக வெற்றி சிறந்தபடியால் சாத்தான் தேவனுடைய வார்த்தையை சந்தேகப்படுத்தும்போது நீங்கள் அவனை முறியடிக்க முடியும்.

உங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருப்பதுடன் செயல்படுவோம். நீங்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கும்போது கீழே குறிப்பிட்டுள்ள சில உணர்வுகளும் சிந்தனைகளும் உங்களை குறுக்கிடலாம்.

## 1. நீங்கள் உண்மையில் இரட்சிக்கப்படவில்லை :-

நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கு இயேசுவை கூப்பிட்டால் மட்டும் போதாது.

***"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; ஒருவரும் பெருமை பாராட்டக் கூடாதபடிக்கு இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு."*** இது தேவனுடைய வார்த்தைகளை நான் விசுவாசிக்கிறேன்.

***"கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்கிற எவனும் இரட்சிக்கப்படுவான்"*** என்று எழுதியிருக்கிறபடி, “நான் இப்பொழுது அவருடைய நாமத்தை சொல்லி கூப்பிட்டு இரட்சிக்கப்படுகிறேன்.”

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் நீ இரட்சிக்கப்படுவாய்."*** ஆகவே கர்த்தராகிய இயேசுவை என் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார் என்று விசுவாசிக்கிறேன். ஆகவே நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்.

## 2. நீ தேவனுடைய பிள்ளை அல்ல :-

நீ இன்னும் பிசாசின் பிள்ளைதான். ஆகவே பிசாசு உன் வாழ்வின் மீது அதிகாரம் செலுத்துகிறான்.

***"அவர் தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்குள் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் அவருடைய இரத்தத்தினாலே நமக்கு உண்டாயிருக்காது"*** என்று எழுதப்பட்டிருக்கிறதை நான் நம்புகிறேன்.

''அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேருக்கும் தமது பிள்ளைகளாகும்படி அதிகாரங்கொடுத்தார்" என்று எழுதப்பட்டிருப்பதை விசுவாசிக்கிறேன்.

நான் இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஆகவே இப்பொழுது நான் அவருடைய பிள்ளை. அவருடைய வார்த்தையை விசுவாசிக்கிறேன்.

***"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று எண்ணிப்பாருங்கள்."*** தேவனுடைய அன்பும் வார்த்தையும் என்னை தமது பிள்ளையாக மாற்றினபடியால் நன்றி செலுத்துகிறேன்.

## 3. உன் பாவங்கள் மன்னிக்கப்படவில்லை :-

நீ அதிகமாய் பாவஞ்செய்திருக்கிறபடியால் தேவன் உன்னை மன்னிக்கமாட்டார்.

***"ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறவர்களுக்கும் ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. ஏனெனில் கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னை பாவம் மரணம் என்ற பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கிற்றே."*** நான் கிறிஸ்துவுக்குள்ளிருப்பதால் பாவம் மரணம் என்ற பிரமாணங்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறேன்.



***"நான் அவர்களுடைய பாவங்களை இனி நினைப்பதில்லை"*** என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே கர்த்தாவே எனது பாவங்களை நினைக்காமலிருப்பதற்காக உமக்கு நன்றி.

## 4. நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாய் என்றும் உனக்கு நித்திய ஜீவன் இருக்கிறதென்றும் நிச்சயமில்லை :-

***"தேவன் தமது ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"*** என்று எழுதப்பட்டுள்ள வசனத்தின்படி, நான் நித்திய ஜீவனைப் பெறும்படி உமது குமாரனாகிய இயேசுவை எனக்குத் தந்தருளினபடியால் உமக்கு நன்றி.

***"நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கைகளிலிருந்து பறித்து கொள்வதுமில்லை."*** இயேசு உமது நித்திய ஜீவனுக்காக நன்றி.

***"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்."*** தேவனுடைய வார்த்தையை நான் விசுவாசிக்கிறேன்.

***"பொய்யுரையாத தேவன் ஆதிகாலம் முதல் நித்திய ஜீவனை குறித்து வாக்குத்தத்தம் பண்ணி, அதை குறித்த நம்பிக்கையை பற்றி." "பிள்ளைகளே, அவருடைய நாமத்தின் நிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்"*** என எழுதப்பட்டுள்ளது. ***"நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம்."*** கர்த்தாவே நித்திய ஜீவனைக் குறித்த வாக்குத்தத்தத்திற்காக உமக்கு நன்றி.

இந்த சாட்சியை தேவன் நமக்களித்துள்ளார். "தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவ குமாரனில்லாதவன் ஜீவனில்லாதவன். அவருடைய குமாரனுடைய நாமத்தில் நீங்கள் விசுவாசம் வைக்கும்படிக்கும் நித்திய ஜீவனை அடையும்படிக்கும் இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். நான் குமாரனை பற்றிக்

கொண்டிருப்பதால் எனக்கு நித்திய ஜீவன் உண்டு. தேவனை எனக்கு நித்திய ஜீவனை தந்த படியால் உமக்கு நன்றி.

**5. உன் வாழ்வை ஒன்றும் மாற்றவில்லை. நீ எப்பொழுதும் இருக்கிறது போலவே காணப்படுகிறாய். உன்னில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை :-**

இப்படியிருக்க ***"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின."*** இவைகள் எல்லாம் தேவனிடமிருந்து வந்தன. நான் கிறிஸ்துவுக்குள்ளிருப்பதால் புது சிருஷ்டியாக இருக்கிறேன். பழைய வாழ்க்கை கடந்து சென்று புதிய வாழ்க்கை எனக்கு வந்தபடியால் தேவனே உம்மைத் துதிக்கிறேன்.

ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ***"ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணபடுத்தியிருக்கிறார்."*** அதை நான் விசுவாசிக்கிறேன். இதற்கு உமக்கு நன்றி.

***"தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டிருக்கிறீர்களே."*** கர்த்தாவே உமது சாயலின்படி என்னைப் புதுப்பித்தபடியினாலே உமக்கு நன்றி.

மேற்கண்ட வசனங்கள் அனைத்தும் சாத்தானை முறியடிப்பதற்கு உங்களை பெலப்படுத்தும் என்று நம்புகிறேன். தேவனிடமுள்ள ஐக்கியத்தை குறித்து சந்கேப்பட முடியாது. சந்தேகம் வரும் போதெல்லாம் இந்த வசனங்களை அறிக்கையிட்டால் பிசாசு உங்களை விட்டு ஓடிவிடுவான்.

தேவனுடைய வசனம் உங்களை ஆளுகை செய்யவேண்டும். இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாக இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களை உணர்வுகளும் சிந்தனைகளும், கண்கள் காணுகிறவைகளும் உங்களை இனிமேல் ஆளுகை செய்யாதபடிக்கு காத்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய சத்தியமே உங்களுடைய தரமான நிலையாக இருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தை கூறுகிறபடி நீங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளை களாயிருக்கிறீர்கள். உங்களுக்குள் இப்பொழுது நித்திய ஜீவன் இருக்கிறது. உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதென்று வேத வசனம் கூறுகிறது.



பின்வரும் ஜெபத்தை என்னுடன் இணைந்து ஜெபியுங்கள் :

*பரலோக பிதாவே,*

*உம்மை எனக்கு வெளிப்படுத்தி என்னை உமது குமாரானாகிய இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வந்தபடியால் உமக்கு நன்றி. உமது வார்த்தையின் அடிப்படையில் நான் உமது பிள்ளை என்ற தன்னம்பிக்கையின் உறுதி எனக்கு இருக்கிறது. நான் புது மனிதனாக புதிய ஜீவனைப் பெற்றிருக்கிறேன். இப்பொழுது நான் பாவத்தின் வல்லமையிலிருந்தும் தண்டனையிலிருந்தும் விடுதலையாக்கப் பட்டிருக்கிறேன். இனிமேல் என் பாவத்தை ஒருபோதும் நீர் நினைக்கப்போவதில்லை.*

*இப்பொழுது நித்திய ஜீவனையும் பரிபூரண ஜீவனையும் நான் பெற்றிருக்கிறேன். எனது நற்கிரியைகளையல்ல நீர் எனக்காக இவைகளை செய்தபடியால் உமக்கு நன்றி. உமது வாக்குத்தத்தங்களை எனக்கு அளிப்பதாக எனக்கு உமது வேதத்தில் கூறியிருப்பதற்காக நன்றி. நான் உம்மோடு ஐக்கியப்பட்டிருப்பதால் இவைகளை எனக்கு இலவசமாக நன்கொடையாக அளித்திருப்பதற்காக உமக்கு நன்றி.*

*நான் நினைப்பதை விட அதிகமாய் என்னை நேசித்து இவைகளையெல்லாம் எனக்காக செய்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். என்னை நேசித்து சிலுவையில் எனது இடத்தில் நீர் எனக்காக மரித்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்.*

*நீர் சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலம் சாத்தானை தோற்கடித்தும் வனாந்திரத்தில் உமது வசனத்தின் மூலம் அவனை முறியடித்ததையும் நான் விசுவாசிக்கிறேன். எனது சார்பாக சாத்தானை முறியடித்ததற்காக உமக்கு நன்றி. உம்மைப் போல் சாத்தானை எப்படி முறியடிப்பது என்று உமது வார்த்தையின் மூலம் எனக்கு கற்பித்தபடியால் உமக்கு நன்றி.*

*நான் எதை பார்த்தாலும், உணர்ந்தாலும் உமது வார்த்தையை விசுவாசித்து வாழ உதவிச் செய்யும். ஆதாமும் ஏவாளுமல்ல, இயேசுவே எனது முன்மாதிரி. எனது வாழ்வைக் குறித்தும் உம்மை குறித்தும் அதிகமாய் எனக்கு வெளிப்படுத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே! ஆமென்!*

# நீங்கள் உண்மையான சந்தோஷத்தை அடைவது தேவ சித்தமாகும்

## அத்தியாயம் - மூன்று



*நீங்கள் உண்மையான சந்தோஷத்தை பெற்றிருப்பது தான் தேவனுடைய சித்தம்! தேவன் நல்லவர், உங்களுக்கு நல்லவைகளை மட்டுமே அளிக்க விரும்புகிறார். நீங்கள் தேவனுக்குள் விசுவாசம் வைத்து, அவருடைய பிள்ளையாக மாறுவதின் அடிப்படையில் அவருடன் நெருங்கிய உறவு வைத்து தேவனை அறிந்துகொள்ள முடியும்.*

*தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்துகொள்வதன் மூலம் அவரை தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்ள முடியும். ஒரு மதவாதியாக கிறிஸ்தவனாயிராமல் அவருடைய குமாரனாகிய இயேசுவின் மூலம் சிருஷ்டிகளுடன் நெருங்கியதை பரிபாலிப்பதே கிறிஸ்தவ வாழ்க்கையாகும்.*

*இந்த அதிகாரத்தில் உலகம் மற்றும் பிசாசுகள் கூறுவதை பாராமல் மதங்கள் கூறுவதை பொருட்படுத்தாமல் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்துகொள்ள முடியும். தேவ*



*ஆவியானவர் அவரை நமக்கு வெளிப்படுத்தும்போது தேவன் மீதுள்ள உங்கள் நம்பிக்கையும் அன்பும் வளர்ந்து பெலனடைந்து ஒவ்வொரு நாளும் அவருடைய பிரசன்னத்தில் ஆசீர்வாதங்களைப் பெற முடியும்.*

*தேவனை தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்வதன் மூலம் அவருடைய சித்தத்தையும் நமது வாழ்வுக்குறிய திட்டத்தையும் நோக்கங்களையும் அறிய முடியும்.*

### நீங்கள் உண்மையான சந்தோஷத்தை அடைவது தேவ சித்தமாகும்......

ஒவ்வொரு நாளும் சத்தியத்தின்படி ஜீவிப்பதினால் தேவனிடமிருந்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற முடியும். ஏற்கனவே நீங்கள் இயேசு கிறிஸ்து மூலம் அநேக ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் பாவங்களுக்கேற்றவாறு தண்டிக்கப் படாமல் இயேசு கிறிஸ்துவுடன் நித்தியமாக பரலோகத்தில் நேரத்தை செலவிடுவீர்கள்.

இயேசு கிறிஸ்து மூலம் தேவனுடன் நல்ல ஐக்கிய உறவை நீங்கள் வைத்திருப்பதால் புது சிருஷ்டிகளாயிருக்கிறீர்கள். நித்தியத்தின் அதிகபட்சமான நேரத்தை இயேசுவுடன் அனுபவிப்பீர்கள். நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது நாம் வர்ணிக்க முடியாத அளவில் தேவன் உங்களுக்கு பெரிய காரியங்களை செய்துள்ளார்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தையாக இருப்பதால் அனுதினமும் வேத வசனத்தினால் உங்களை போஷித்துக் கொள்வதன் மூலம் வளர்ச்சி அடைய முடியும். உங்களுக்குள் வாழும் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை உங்களுக்கு வெளிப்படுத்துவார். தேவன் உங்களுக்கு செய்த எல்லா காரியங்களை குறித்து அவர் வெளிப்படுத்துவார்.

தேவனுடைய வசனம் நீங்கள் தேவனுடைய பிள்ளையென்றும் கிறிஸ்து உடன் சுதந்திரவாளியென்றும் கூறுகிறது. சிருஷ்டிகராக தேவனுக்குரியதெல்லாம் உங்களுக்குரியது என்பதே இதன் அர்த்தம்.

நீங்கள் பழைய மனிதனல்ல, பழையவைகள் சென்று எல்லாம் புதிதாயின. இதை பெறுவதற்கு எனக்குத் தகுதியில்லை என்று நினைக்கலாம். ஆனால் பழையது போல் ஒருபோதும் சிந்திக்க கூடாது. சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்டார் என்றும் தேவனுக்கு முன்பாக விலையேறப் பெற்றவர்கள் என்றும் சிந்திக்க வேண்டும்.

அவர் உங்களுக்கு பதிலாக தமது குமாரனை தண்டித்தார். இந்த அன்பு நமது கற்பனைக்கு அப்பாற்பட்டது. பிசாசும் வேறு யாரும் இந்த மதிப்பை நீங்கள் இழந்துவிடாதபடிக்கு கவனித்துக் கொள்ளுங்கள். இந்த மதிப்பைக் குறித்து சந்தேகம் எழும்பும்போது இயேசு உங்களுக்காக சிலுவையில் மரித்ததை நினைவு கூறுங்கள்.

***"அவர் தனக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்."*** விசுவாசத்தை துவக்கி முடிக்கிறவருமாகிய இந்த இயேசுவை நோக்கி... கர்த்தரின் வசனம் கற்றுக்கொடுக்கிறது. உங்களுக்குள் காணப்படும் புது வாழ்வு இயேசுவினால் அளிக்கப்பட்டது. ***"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்"*** என்று இயேசு கூறினார். இயேசு தான் தேவனிடம் செல்ல ஒரே வழி.

நீங்கள் இயேசுவை பின்பற்றுவதால் அவருக்குள் உங்கள் விசுவாசம் காணப்பட வேண்டும். ***"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார் அவருடைய மகிமையை கண்டோம்; அது பிதாவுக்கு ஒரு பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"*** என்று வேதம் கூறுகிறது. இயேசு தான் ஜீவ வார்த்தையாக நமக்குள் வாழ்கிறார். ஆகவே நீங்கள் இயேசுவைப் போல் காணப்பட வேண்டும்.

***"இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் இந்த உலகத்திற்குள் வந்தார்."*** இதில் நீங்களும் நானும் காணப் படுகிறோம். இந்த பூமியில் இயேசு பாவமில்லாமல் வாழ்ந்த வாழ்க்கை நமக்குரியதாகும். சாத்தான் மீது அவருடைய வெற்றியும், அவருடைய சரீரத்தில் அடைந்த தண்டனைகளும் நமக்காகவே சகித்தார். அவர் சிலுவையில் சிந்திய இரத்தமும், மரணமும், அடக்கமும், நரகத்தில் சென்றதும், உயிர்த்தெழுதலும் மகிமை அடைந்ததும் பலலேகத்திற்கு ஏறிச்சென்றதும் நமக்குரியதாகும்.

நமக்காக அல்லாமல் வேறு யாருக்காகவும் இயேசு இந்த உலகத்தில் வரவில்லை. அவரை வரவேற்க ஒருவருமில்லை. அவர் சிலுவையில் அறையப்படுவதற்கேற்ற பாவத்தை எதுவும் அவர் செய்யவில்லை. சிலுவையில் நமக்காக ஜீவனை அளித்தார். அவருடைய மரணம் அன்பின் செயலாக காணப்பட்டது.

அவர் சிலுவையில் நமக்காக செய்து முடித்த எல்லா காரியங்களுடன் நாம் ஒன்றுபட வேண்டும். அவர் நமது இடத்தில் மரித்தார் என்ற சத்தியத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.



இயேசு எல்லாவற்றையும் நமக்காக செய்தார். இயேசு தனக்கு ஊழியம் மற்றவர்களால் செய்யப்பட வராமல் மற்றவர்களுக்காக ஊழியம் செய்யவே அவர் இந்த உலகில் வந்தார். "நான் என் ஜீவனை என் ஆடுகளுக்காக கொடுக்கிறேன். அவைகளை ஒருவனும் என் கைகளிலிருந்து பறித்துகொள்ள முடியாது" என்று இயேசு கூறினார். இயேசு சிலுவையில் மரித்தபோது பிதாவும் குமாரனும் அன்பினிமித்தம் ஒருங்கிணைந்து செய்தார்கள்.

பிதாவை இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தவே இயேசு இறங்கி வந்தார். மனுக்குலத்தை பிசாசு வஞ்சித்தான். தேவன் தமது பிள்ளைகளுக்கென்று காண்பித்த அன்பை பிசாசு தன் பொய்கள் மூலம் ஏமாற்றினான்.

இயேசு செய்த எல்லாம் உனக்கும் எனக்குமே ***"அப்படியே மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனை கொடுக்கவும் வந்தார் என்றார்,"*** மற்றும் ***"ஒருவன் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதை கெடுக்கிறேன்"*** என்று இயேசு தானே தன் ஜீவனை சிலுவையில் நமக்கு கொடுத்தார்.

பல நூற்றாண்டுகளாக இந்த அன்பையும் தேவன் நமக்கு வைத்திருந்த எல்லா காரியங்களையும் விளைங்கிக்கொள்ளாமல் மக்கள் தேவனை விட்டு விலகிச் சென்றிருந்தார்கள். ஆனால் நாம் தேவனிடம் திரும்பி செல்வதற்குறிய ஒரே வழியான இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்தில் அனுப்பினதின் மூலம் அவர் தமது அன்பை வெளிப்படுத்திக் காட்டினார். மேலும் நமது அன்றாட வாழ்வின் மூலம் தேவனுடன் எப்படி தெடர்புகொள்வது என்பதையும் அவர் வெளிப்படுத்தினார்.

அவருடைய பிள்ளைகளாகிய நாம் இனி பயப்பட வேண்டியதில்லை. ஏனெனில் நமது இடத்தில் அவர் இயேசுவை ஏற்கனவே தண்டித்துவிட்டார். ***"நாம் தேவனுடைய கோபாக்கினையை அடையாமல் அவருடைய இரட்சிப்பை பெறுவதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறோம்."*** ஆகவே நாம் இனி ஒளிந்து வாழாமல் அவருடன் நெருங்கி வாழ்வோம்.

பூமிக்குரிய உங்கள் தகப்பன் எப்படி உங்களை நடத்துகிறார் என்பதை அடிப்படையாகக் கொண்டு பரம பிரதாவின் செயல்கள் அமையவில்லை. ஆகவே பிதாவைக் குறித்த சாயலை வேதத்தையும் ஜீவ வார்த்தையாகிய இயேசுவையும் குறித்து அறிவதன் மூலம் உங்களுக்குள் பதிவு செய்ய முடியும். அதன் மூலம் பிள்ளைகளாகிய நீங்கள் ஆசீர்வாதங்கங்களை சுதந்திரத்தை தேவனிடமிருந்து பெற முடியும்.

வேதாகமத்திலிருந்து சில விலையேற பெற்ற வார்த்தைகளை கீழே குறிப்பிடுகிறேன் :

***"என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.***

***அவர் என் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து என் நோய்களை யெல்லாம் குணமாக்கி, என் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு கிருபையினாலும் இரக்கங்களினாலும் என்னை முடி சூட்டினார்.***

***என் வாழ்க்கையை நன்மைகளினால் நிரப்பினார். அதனால் ஒரு கழுகைப் போல் இளமையும் பலசாலியுமானேன். கர்த்தர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு இரங்கி அவர்களுடைய சுதந்திரத்தை அவர்களுக்கு அளிக்கிறார். கர்த்தர் கிருபையும் இரக்கமுள்ளவரும் கோபப்படுவதற்கு தாமதமாயும் அன்பு நிறைந்தவருமாயிருக்கிறார்.***

***அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார், அவர் எப்பொழுதும் கோபங்கொள்ளமாட்டார். நமது பாவங்களுக்கேற்றாற்போல் நம்மைத் தண்டியாமலுமிருக்கிறார்.***

***பூமிக்கு வானம் எவ்வளவு உயர்ந்ததோ அவருக்கு பயந்தவர்கள் மீது அவருடைய கிருபையையும் பெரிதாக உள்ளது.***

***கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாக அவர் நமது பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.***

***தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல தம்மை கனப்படுத்துகிறவர்களுக்கும் அவர் இரங்குகிறார்."***

இது பிதாவைக் குறித்த அருமையான சாயலல்லவா? தேவனுடைய அன்பைக் குறித்து கூறும் மேற்கண்ட பகுதி மிகவும் சுருக்கமானது தான். இப்பொழுது இயேசுவே நமக்குள் தேவனுடைய சாயலாக இருக்கிறார்.

***"இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவர் தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்தீகரிப்பை உண்டு பண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்"*** என வாசிக்கிறோம்.

***"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை***



***கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு"*** என்று கூறப்பட்டுள்ளது.

***"என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டிருக்கிறான்"*** என்று இயேசு கூறுகிறார். தேவன் யார் என்றும் அவர் நமக்காக என்ன செய்தாரென்றும் நாம் அறிந்துகொள்ள தேவன் விரும்புகிறார். இதன் மூலம் அவருடன் நாம் நெருங்கிய ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதனால் நித்திய நித்தியமாக அவருடைய ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்க முடியும்.

மேலும் இயேசு, ***"நான் உங்களை சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்"*** என்று இயேசு கூறுகிறார். தாம் பிதாவினிடத்திலிருந்து கற்றுக்கொண்ட எல்லாவற்றையும் நாம் அறிந்துகொள்ளும்படி தேவன் விரும்புகிறார்.

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வாழ்ந்து பரம பிதாவை உங்களுக்கு வெளிப்படுத்தி நாம் அவருடன் நெருங்கிய ஐக்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ளும்படி விரும்புகிறார்.

***"எழுதியிருக்கிறபடி, தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. ஆனால் நமக்கோ தேவன் அவைகளை தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஊழியங்களையும், ஆராய்திருக்கிறான். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படி போல, தேவனுடைய ஆவியேயன்றி அருவறும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாம் உலகத்தின் ஆவியைப் பெருமல் தேவனிடத்திலிருந்து வரும் ஆவியினால் அறிந்துகொள்கிறோம். இதனால் தேவன் நமக்கு இலவசமாக அளிதழுதுள்வைகளை புரிந்து கொள்கிறோம்."***

இந்த வசனங்களிலிருந்து நமது ஐம்புலன்களின் அறிவினால் தேவனை அறிந்து கொள்ளவில்லை. ஆனால் தேவனுடைய வெளிப்படுத்தலின் மூலம் அவைகளை அறிந்துகொள்கிறோம். அவருடைய எல்லா ஆசீர்வாதங்களையும் நாம் சுதந்தரிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்று கூறுகிறது.

***"மேலும் அவர் தமது சொந்த குமாரனென்றும் பாராமல் அவரையே நமக்காக தந்தருளினவர் இவைகளையெல்லாவற்றையும் நமக்கு அருளாமலிருப்பது எப்படி? உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு***

***அவர் நன்மையை வழங்காதிரார். நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது"*** அவரிடத்தில் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை என்று வேதம் கூறுகிறது.

ஆகவே நாம் நமது ***"ஆத்துமா வாழவதுபோல எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுமென்று"*** தேவன் விரும்புவதை அறிந்துகொள்ள வேண்டும். ***"நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகித்ததினால் அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் பிடிகளிலிருந்து அகப்பட்டவர்களையும் விடுவிக்கிறவராயும் சுற்றித் திரிந்தார்"*** என்று வேதம் கூறுகிறது.

இயேசு நோயாளிகளை குணமாக்கி, குருடர்களை பார்வை அடையச் செய்து, செவிடர்களை கேட்க செய்யவும் ஊமையர்களை பேசவும் அசுத்த ஆவிகளை விரட்டியும் மரித்தோர்களை உயிரோடு எழுப்பியும், குஷ்டரோகிகளை குணமாக்கவும் செய்தார். அவரிடத்தில் கொண்டு வரப்பட்ட எல்லா நோயாளிகளையும் அவர் குணமாக்கினார். ஏனெனில் ***"பாவிகளை இரட்சிக்கவும் பிசாசின் கிரியைகளை அழிக்கவுமே இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தார்."***

இந்த இயேசு கிறிஸ்து ***"நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்."*** இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு செய்த அற்புதங்களை அவர் இன்றும் செய்து கொண்டிருக்கிறார். இயேசுவை சந்தித்த எல்லா மக்களின் தேவைகளை சந்திப்பதிலும் அவர் அதிக அக்கரையும் மனதுருக்கமுள்ளவருமாயிருந்தார். ஆயிரக்கணக்கான மக்களுக்கு சரீரப்பிரகாரமான உணவையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் அளித்தார்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பரம பிதாவிடமிருந்து எப்படி ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று முக்கியமாக அறிந்திருக்க வேண்டும். ***"நீங்கள் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நல்லதும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ளும்படி, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறு ரூபமாகுங்கள்."*** இதில் தேவனுடைய சித்தம் நல்லதும், பிரியமானதும் பரிசுத்தமாதுமென்று விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை தவிர பிசாசின் வார்த்தைகளை உங்கள் மனதிற்குள் அனுமதிக்காதீர்கள். ***"இயேசுவின் மீது எப்பொழுதும் உங்கள் கண்கள் பொருத்தி வையுங்கள்."*** நீங்கள் நன்றாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து செழித்திருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.



இந்த அதிகாரத்திலுள்ளவைகளை திரும்பவும் நினைவுக்கு கொண்டு வரும் முறையில் பின்வரும் ஜெபத்தை செய்யுங்கள் :

*அன்புள்ள பரம பிதாவே,*

*நீர் யாராக, எப்படிபட்டவராகவும் மாறாதவராயுமிருக்கிறதற்காக மிக்க நன்றி. உண்மையான மகிழ்ச்சியை எனக்கு நீர் அளிப்பது உமது சித்தமாயிருப்பதால் உமக்கு நன்றி. எனக்கு எப்பொழுது நல்லவைகளை நீர் அளிப்பதால் உமக்கு மிக்க நன்றி கூறுகிறேன். நீர் அதிசயமானவர்!*

*என்னை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும் உமது பரிசுத்த ஆவியானவருக்கு மிக்க நன்றி. நீர் எனக்கு ஆயத்தம் செய்து வைத்துள்ளவைகளைக் குறித்தும் இயேசுவைக் குறித்தும் அவர் எனக்கு வெளிப்படுத்துகிறதற்காக நன்றி. உம்மை நான் அறிந்துகொள்ளவும் ஒன்றையும் மறைக்காமல் எனக்கு வெளிப்படுத்துகிறதற்காக உமக்கு நன்றி.*

*என்னை உமது நண்பனாக நினைத்து எல்லாவற்றையும் என்னிடம் பகிர்ந்து கொள்ளுகிறதற்காகவும், அதனால் நான் உம்மிடம் நெருங்கி வாழவும், ஐக்கியத்தை ஏற்படுத்தவும் உதவி செய்தபடியால் நன்றி.*

*நான் கிறிஸ்துவுக்குள் குழந்தையென்றும் அதிலிருந்து வளர்ச்சி அடைய என் கண்களை கிறிஸ்துவின் மீது பதித்து வைத்திருக்கிறேன். நான் அனுதினமும் கிறிஸ்தவனாக வாழ்வதன் மூலம் எனக்கு வைத்திருக்கும் எல்லா ஆசீர்வாதங்களைக் குறித்து வெளிப்படுத்தினபடியால் பரவசமடைகிறேன்.*

*உம்மை எனக்கு வெளிப்படுத்தினபடியால் உமக்கு நன்றி. உமது பிள்ளையாகிய நான் உமக்குரிய சுதந்திரங்களை சுதந்தரித்துக் கொள்கிறேன். எனது எல்லா தேவைகளும் உம்மால் சந்திக்கப்படுகின்றன. எனது ஆத்துமா வாழ்கிறது போல நான் எல்லாவற்றிலும் வாழ்ந்து ஒழிந்திருக்கிறேன். இவைகள் எல்லாம் நான் இயேசுவுடன் ஒன்று பட்டிருப்பதினால் நடந்தன.*

*இயேசுவே நீர் பூமிக்கு வந்து எனக்கும் மற்றுள்ள எல்லாருக்காகவும் செய்த காரியங்களுக்காக உமக்கு நன்றி. உமக்கு ஊழியம் செய்யப்படுவதற்கு வராமல் நீர் எங்களுக்கு ஊழியம் செய்ய வந்தபடியால் உமக்கு நன்றி. நீர் மக்களை நேசித்து, குணமாக்கி, இரட்சித்து தன் மூலம் பிதாவை எனக்கு காண்பித்தபடியால் உமக்கு நன்றி. இதை நீர் எனக்கு செய்தபடியால் மிக்க நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே! ஆமென்!*

# இயேசு உங்களுக்குள் இருப்பதே உண்மையான மகிழ்ச்சி

## <u>அத்தியாயம் - நான்கு</u>



*இயேசு உங்களுக்குள்ளிருப்பதே உண்மையான மகிழ்ச்சி. இயேசு உங்களுக்குள் வாசம் செய்வதே எல்லாம் பெரிய காரியமாக அமைந்திருப்பதால் நீங்கள் என்றும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.*

*இரட்சகராகிய இயேசுவின் அனுதினமும் நம்பிக்கையை வைக்க வேண்டும். இப்பொழுது உங்கள் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் அவரை எப்படி நம்புவது என்று கற்றுக்கொண்டீர்கள்.*

*இயேசுவை பூரணமாக உங்களுக்குள் வெளிப்படுத்துவதற்கு உங்கள் வாழ்நாள் முழுவதும் தேவைப்படும். இந்த அத்தியாயத்தில் இயேசு கிறிஸ்துவின் அடிப்படையான குணாதிசயங்களைக் குறித்தும் கிறிஸ்துவுக்குள் உங்களுடைய பரிபூரண தன்மையைக் குறித்தும் காணலாம்.*

*கிறிஸ்துவுக்குள் தேவத்தத்துவத்தின் பரிபூரணங்கள் அனைத்தும் வாசமாயிருப்பதையும் நாம் அவருக்குள் பரிபூரணமாயிருப்பதையும் காணலாம். உங்களுக்கு ஒரு குறைவும்*



*இல்லை. கிறிஸ்து உங்களுக்குள் எப்பொழுதும் வாசமாயிருக்க வேண்டும்.*

*தேவனுடைய வார்த்தையிலிருந்து இது ஒரு அதிசயமான சத்தியமாகும். அனுதினமும் உங்களுக்குள் எல்லாமும் வாழ்ந்திருப்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.*

### <u>இயேசு உங்களுக்குள்</u> இருப்பதே உண்மையான மகிழ்ச்சி....

***"ஏனென்றால் தேவத்தத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீர பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்."*** உங்களுக்கு ஒரு குறைவுமில்லை. இப்பொழுது தேவன் உங்களை சிருஷ்டித்தபடி அனைத்தும் தேவனுக்குள் அடங்கியுள்ளது."

நீங்கள் அவருக்குள்ளும் அவர் உங்களுக்குள்ளுமிருப்பதால் உங்களுக்கு ஒரு குறைவுமில்லை. கிறிஸ்துவே உங்களுக்குள் மகிமையின் நம்பிக்கையாயிருக்கிறார்.

பின்வரும் வசனங்களை படித்துப் பாருங்கள். அதினால் நீங்கள் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களென்று அறிந்து கொள்வீர்கள் :

***"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சி அடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து என்னை அமர்ந்த தண்ணீர்களண்டையில் கொண்டு போய் விடுகிறார். அவர் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன். தேவரீர் என்னோடிருக்கிறார். உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும். என் சத்துருக்களுக்கு முன்பாக ஒரு பந்தியை ஆயத்தம் செய்கிறார். என் தலையை எண்ணெயினால் அபிஷேகம் செய்கிறார். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.***

***என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்."***

இங்கு இயேசு மேய்ப்பனாகவும் நீங்கள் ஆடுகளாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள். இதற்கு முந்தின அதிகாரத்தில் நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்றும் பார்த்தோம். இந்த அதிகாரத்தில் இயேசுவுடன் உள்ள ஐக்கியத்தைக் குறித்து காணலாம்.

இந்த வசனங்களை படித்து பரிசுத்த ஆவியானவர் இவைகளை உண்மையாக வெளிப்படுத்தும்படி எதிர்பாருங்கள்.

தேவன் தமது வார்த்தைகள் மூலம் உங்கள் உள்ளான மனிதனை தொட விரும்புகிறார். நீங்கள் கற்பனை செய்து பார்த்திராத அளவிற்கு தேவன் உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார்.

***"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக் கிறதாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும் வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்."***

இயேசு உங்கள் மேய்ப்பர் அவர் உங்களை நடத்தி ஆசீர்வதிப்பார். அவர் நல்ல மேய்ப்பர். எனவே ஜீவ பாதையில் நடத்திட உங்களை பாதுகாக்கின்றார், நீங்கள் இனி கவலைப்பட வேண்டாம். மேய்ப்பர் உங்கள் தேவைகளை சந்தித்து சமாதானம், சந்தோஷம் தருவார்.

***"உன் முழு இருதயத்தோடும் கர்த்தரைச் சார்ந்திரு, உன் சுய புத்தியின் மேல் சாயாதிருப்பாயாக. உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக்கொள். அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார். மனிதனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழிகள் உண்டு. அதன் முடிவோ மரண வழிகள்."*** ஆகவே இயேசுவை மட்டும் பின்பற்றுங்கள். அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.

***"மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்."***

***ஆகவே நீங்கள் இயேசுவுக்குள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். பின்வரும் வசனங்களை வாசித்து தியானியுங்கள். உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி நீர் என் அடைக்கலம், என் கோட்டை, உம்மை நம்பியிருக்கிறேன் என்று சொல்லுவேன். அவர் என்னை வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை நோய்களை தப்புவிப்பார். அவர் தமது***



***சிறகுகளிலே உன்னை மூடுவார். அவர் செட்டைகளின் மூடி அடைக்கலாம் புகுவாய். அவருடைய சத்தியம் உனக்கு பரிசையும் கேடகமுமாயிருக்கும்.***

***இரவில் உண்டாகும் பயங்கரத்திற்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்திற்கும் பயப்படமாட்டாய்.***

***உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனை காண்பாய். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்கு தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது. வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிளெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னை தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள். சிங்கத்தின் மேலும் விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து பால சிங்கத்தையும் வலு சர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய். அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிற படியால் அவனை விடுவிப்பேன். அவன் என் நாமத்தை அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன். அவன் என்னை நோக்கி கூப்பிடுவான். நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன். ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனை கனப்படுத்துவேன். நீடித்த நாட்களாய் அவனைத் திருப்தியாக்கி என் இரட்சிப்பை அவனுக்கு காணபிப்பேன்.***

உங்கள் சிருஷ்டிகரிடம் உங்களுக்குள்ள விசேஷ ஐக்கியத்தினை இது வெளிப்படுத்துகிறது. இந்த வசனங்களை படித்து அவைகள் உங்களுக்கென்று எழுதப்பட்டவைகளாக விசுவாசியுங்கள். தேவனை விசுவாசிக்கிற அனைவருக்கும் தேவன் அன்பாக எழுதிய அன்பின் கடிதம் தான் வேதாகமம்.

***இயேசுவைப்போல இதற்கு முன் ஒருவரும் உங்களை நேசித்ததில்லை. இதனிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்துக்கும் நாமக்காரணராகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்காற் படியிட்டு நீங்களும் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் நீங்கள்***

***அன்பிலே வேரூன்றி நிலைப் பெற்றவர்களாகி சகல பரிசுத்தவான் களோடுங்கூட கிறிஸ்துவின் அன்பின் அகலமும் ஆழமும் உயரமும் இன்னதென்று தேவன் உங்களுக்கு அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவருக்கு மகிமை உண்டாவதாக. ஆமென்!***

நமது புத்திக்கு மேலாக தேவனுடைய அன்பு, ஐசுவரியம், மன்னிப்பு, சமாதானம், வல்லமை, கிருபை, நன்மை மற்றும் வல்லமைகளை புரிந்துகொள்ள முடியாது. தேவன் உங்களுக்கென்று வைத்திருக்கும் காரியங்கள் முடிவில்லாதது.

உங்களுக்குள் வாழும் கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு தேவையான அனைத்தும் அடங்கியுள்ளன. ***இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.*** அவர் உனக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பார்.

இழந்துபோன ஆத்துமாக்களை இரட்சிக்கும்படியாக இயேசு இந்த உலகத்தில் வந்தார். ***இயேசு நன்மை செய்கிறவராயும் பிசாசின் பிடியில் அகப்பட்ட எல்லாரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.*** பாவத்தினால் வந்த சாபத்தை அகற்றி மனுக்குலத்தை மீண்டும் தேவனிடம் ஒப்புரவாக்கும்படி அவர் இந்த பூமியில் வந்தார்.

நித்திய ஜீவன் என்றென்றைக்கும் மட்டும் உரியதாயிராமல் இப்பொழுதுள்ள வாழ்விற்கும் இனி வரும் வாழ்விற்கும் தரமான வாழ்வை அளிப்பதாக உள்ளது. நாம் இனி அடிமைத்தனத்தில் வாழ்வதை தேவன் ஒருபோதும் விரும்புவதில்லை. இயேசுவை விசுவாசிப்பவர்களுக்கு அவர் பிசாசு பிடித்தவர்களை விடுவிப்பதும், நோயாளிகளை குணமாக்குவதும், பாவிகளை இரட்சிப்பதும், பசியுள்ளவர்களை போஷிப்பதும், மக்களின் தேவைகளை சந்திப்பதின் மூலமாக இயேசு அனைத்தையும் தெளிவாக்கினார். அதைத்தான் இன்று உங்களுக்கும் எனக்கும் அவர் செய்வார்.

ஒரு நாள் ***இயேசு பேதுருவின் வீட்டில் வந்தபோது பேதுருவின் மாமியார் காய்ச்சலினால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். இயேசு அவளை தொட்டவுடன் அவள் நோய் குணமாகி சுகமானாள். மாலை நேரத்தில் பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் அந்த ஆவிகளை தமது வார்த்தையினாலே துரத்தி பிணியாளர்கள் எல்லாரையும் குணமாக்கினார். அவர் தாமே தமது பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம் நோய்களை சுமந்தாரென்று ஏசாயாவினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.***



இயேசு பிறப்பதற்கு முன்பு, "அவர் நமது நோய்களை எல்லாம் சுமந்தார். அப்படியிருந்தும் அவர் தேவனால் அடிக்கப்பட்டு நொறுக்கப் பட்டார்" என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது.

***நமது அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமது மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளினாலே நாம் குணமானோம். நாம் அனைவரும் வழி தப்பித்திரிகிற ஆடுகளைப் போல் காணப்பட்டோம். கர்த்தரோ அவர் மேல் ஆக்கினையை வரப்பண்ணினார்.***

***"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள். இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்."***

இயேசு நமது இடத்தில் மரித்தாரென்று நாம் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே, ***பிரியமானவர்களே உங்கள் ஆத்துமா வாழ்கிறதுபோல எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.***

தேவன் நமது பாவங்களை மன்னித்து, அவருடைய பாடுகள், மரணம், உயிர்தெழுதல் மூலம் நமக்கு சுகமளித்தலை அளித்துள்ளார். ஆகவே இந்த விடுதலையான செழிப்பின் வாழ்வில் வாழ்வது உங்களுடைய சிலாக்கியமாகும்.

உங்களுக்கு ஜீவனுண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவுமே இயேசு வந்தார். நீங்கள் பரிசுத்தத்திலும், ஆரோக்கியத்திலும், செழுமையாகவும், வெற்றியாகவும், எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்துடன் வாழ வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

சாத்தான் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். நீங்கள் உங்களுடைய பாவம், வியாதி, வேதனை, நோய்கள், தரித்திரம், குறைவு எல்லாவிதமான மன நோய்களிலும், சரீர பிரச்சனைகளிலும் வாழ வேண்டுமென்று பிசாசு விரும்புகிறான்.

தேவன் விரும்புவதை மட்டும் உங்கள் வாழ்வில் அனுபவிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். உங்களுக்கு நன்மையை அளிப்பதே தேவ சித்தமாக உள்ளது. தேவன் வாஞ்சிப்பதை நீங்கள் விரும்பி பரிசுத்த ஆவியானவருடன் ஒத்துழைத்து எல்லா ஆசீர்வாதங்களையும் உங்கள் வாழ்வில் நிறைவேற்றும்படி காத்திருங்கள்.

தேவனுடைய வார்த்தைகளை பயன்படுத்தி சாத்தானை முறியடிப்பீர்கள் என்றும் உங்கள் இருதயத்தில் தீர்மானம் செய்யுங்கள்.

ஆகையால் ***"தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்."*** தேவனிடம் நெருங்கி வாருங்கள். அப்பொழுது அவர் உங்களிடம் நெருங்கி வருவார். உங்களுடைய சரீரம் அவரால் விலைக்கு வாங்கப்பட்டதால் உங்கள் சரீரத்திலும் ஆவியிலும் சுகத்தை எதிர்பார்த்து அனுபவியுங்கள்.

***"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றதும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்."***

தேவனுடைய மன்னிப்பும் சுகமளித்தலும் உங்களுடைய ஆவியிலும் சரீரத்திலும் வெளிப்படுத்தப்படும்போது தேவன் மகிமைப்படுகிறார். மக்களை பாவத்திலும் வியாதிலும் அடிமைப் படுத்துவதன் மூலம் சாத்தான் தேவனுடைய மகிமையைத் திருடுகிறான். சாத்தான் தோற்கடிக்கப்பட்டவன். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை நம்புகிறவர்களுக்கு மன்னிப்பும் ஆரோக்கியமும் எப்பொழுதும் கிடைக்கும்.

சுகமளித்தலை பெறுவதற்கு தேவனுடைய விருப்பத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தேவன் சிருஷ்டித்துள்ள முழு மனிதனைக் குறித்து தேவன் கரிசனையுள்ளவராயிருக்கிறார். தம்மை விசுவாசித்து சுகம்பெறும்படி தன்னை தேடி வந்த, ஒருவரையும் இயேசு புறக்கணித்ததில்லை. அவரை நம்பித் தேடி வந்த அனைவரையும் அவர் குணமாக்கினார். அதை அவர் இன்றும் செய்து கொண்டிருக்கிறார். வேதாகமத்திலிருந்து இயேசுவைக் குறித்து 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட சில காரியங்களைக் காணலாம் :



அவர் பட்டணத்தில் வந்தபோது குஷ்டரோகியான ஒரு மனுஷன் அவரிடம் வந்து, ***"ஆண்டவரே உமக்கு சித்தமானால் என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும்"*** என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு, ***"எனக்கு சித்தமுண்டு! சுத்தமாகு"*** என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான். இது தேவ சித்தமா என்று இயேசுவிடம் கேட்டபோது ஆம் "இது தேவ சித்தம்" என்றார். ஆகவே மக்களை குணமாக்குவது இன்றும் தேவ சித்தம் என்று இதன் மூலம் அறியலாம்.

***"மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார், அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனே கூடப் போனார்கள். அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டு வந்தார்கள், அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள், ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார், அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள், அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்."***

***"அன்று சாயங்காலத்தில் அவர் அவர்களை நோக்கி, அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார். அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள், வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது. அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார், அவர்கள் அவரை எழுப்பி, போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து, இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று."***

***"பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிறபோது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு***

***என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான். அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று, முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று, அவனை அழைத்து வரச் சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து: திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள். உடனே அவன் தன் மேல் வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான். 51 இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்த குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான்."***

***"அப்பொழுது, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ: நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள்."***

***"இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு, அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்."***

இரட்சிப்பு என்பது மனிதனின் பார்வையில் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவது என்றும் தேவனுடன் முழுமையாக தேவத் திட்டத்தின்படி ஒப்புரவாக்கப்பட்டு புதுப்பிக்கப்படுவதாகும். ஆகவே தேவனை மட்டுப்படுத்தாதீர்கள். ஜீவ வார்த்தையாகிய இயேசுவை விசுவாசியுங்கள். தேவன் இதுவரை உங்களுக்கு செய்த காரியங்களுக்காக அவருக்கு மகிமை செலுத்துங்கள். பிசாசு இனிமேல் உங்களிடமிருந்து எதையும் திருடாதபடிக்கு ஒருபோதும் அனுமதியாதிருங்கள். அவன் ஒரு பொய்யன்.



பின்வரும் நன்றி கூறும் ஜெபத்தை ஏறெடுங்கள் :

*அன்புள்ள பரம பிதாவே,*

*இயேசுவுக்குள் உமது பரிபூரணம் சரீரபிரமாக வாழ்கிறதற்காக உமக்கு நன்றி. இயேசு எனக்குள்ளிருப்பதால் இப்பொழுது எனக்கு உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. நானும் இயேசுவும் இப்பொழுது ஒன்றாயிருக்கிறோம்.*

*ஆண்டவரே நீர் எனக்கு மேய்ப்பராயிருப்பதால் எனக்கு ஒரு குறைவுமில்லை. என்னைவிட்டு விலகாமல் எப்பொழுதும் என்னோடிருப்பதால் உமக்கு நன்றி. எனது எல்லாத் தேவைகளையும் சந்தித்து என்னை வழிநடத்தி வருகிறபடியால் உமக்கு நன்றி. நான் இனிமேல் பயப்படாமலிருக்கும்படி என்னை அனுதினமும் நீதியின் பாதைகளில் நடத்துகிறதற்காக உமக்கு நன்றி.*

*ஆண்டவரே உம்முடைய அன்பிலிருந்து ஒன்றும் என்னை பிரிக்காமலிருப்பதற்காக உமக்கு நன்றி. நான் இப்பொழுது உமது நிழலில் தங்கியிருப்பதால் எனக்கு எந்த தீமையும் வராது. எனக்கு நீடித்த ஆயுளைத் தந்து என்னை திருப்தியாக்குவதற்காக உமக்கு நன்றி.*

*வியாதியும் நோயும் இனி என்னை தாக்க முடியாததுக்காக உமக்கு நன்றி. நான் பிசாசை எதிர்த்து, உம்மிடம் நெருங்கி வந்து உம்மிடமிருந்து ஆரோக்கியத்தையும் பாவமன்னிப்பையும் பெற்றுக்கொள்வேன். உமது வார்த்தையின்படி என்னை உம்மிடம் சேர்த்துக்கொள்ளுகிறதற்காக உமக்கு நன்றி. உமது வார்த்தை ஜீவனுடன் என் வாழ்வில் செயல்படுகிறதற்காக நன்றி.*

*ஆண்டவரே உம்மை ஒருபோதும் என் வாழ்வில் மட்டுப் படுத்தமாட்டேன். உம்மை நான் உண்மையாக அறிந்துகொள்ள விரும்புகிறேன். நான் எதைப் பார்த்தாலும் உணர்ந்தாலும் உமது வார்த்தை கூறுவதை மட்டுமே விசுவாசிப்பேன். உமது வார்த்தை முழுவதும் சத்தியம், ஆகவே நீர் என்னை ஒருபோதும் ஏமாற்றமாட்டீரென்று அறிந்திருக்கிறேன். நீர் என்னை அதிகமாய் நேசிக்கிறதற்காக உமக்கு நன்றி.*

*இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!*

# வெற்றியாக ஜெபிப்பதுதான் உண்மையான சந்தோஷம்!

## அத்தியாயம் - ஐந்து



*உண்மையான சந்தோஷம் என்பது வெற்றிகரமாக ஜெபிப்பதாகும். உலகமெங்கிலுமுள்ள கோடிக்கணக்கான மக்கள் அனுதினமும் ஜெபிக்கிறார்கள். ஆனால் ஒரு சில மக்களே ஜெபத்திற்கு பதிலை பெறுகிறார்கள்.*

*உண்மையான ஜெபம் என்பது ஏதோ சில மதச்சடங்குகளையும் பாரம்பர்யங்களையும் ஒரு எந்திரத்தைப்போல் ஜெபம் செய்து கடைப்பிடித்து தேவனின் சக்திகளை பெற வாஞ்சிப்பதல்ல. உண்மையான ஜெபம் என்பது நமது சிருஷ்டி கர்த்தருடன் நேரடியாக இயேசு கிறிஸ்துவின் மூலம் தொடர்பு கொள்வதாகும்.*

*ஒரு கிறிஸ்தவனாக இருந்து தேவனுடைய வார்த்தையின்படி உண்மையாக ஜெபிக்கக் கற்றுக்கொள்வதுதான் ஒரு மனிதனுக்கு முக்கியமாகும். தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு முக்கியமான விலையேறப்பெற்ற சிலாக்கியமாகும்.*



*எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்த சூழ்நிலையிலும் நமது பரம பிதாவிடம் ஜெபித்து பதிலை எதிர்பார்க்கலாம். அவர் நமக்கு வாக்குரைத்துள்ளபடி நமது ஜெபங்களுக்கு பதில் அளிப்பார்.*

*எப்படி பரம பிதாவிடம் தொடர்புகொண்டு அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதென்று இந்த அதிகாரம் நமக்கு தெளிவாக கூறுகிறது.*

### வெற்றியாக ஜெபிப்பதுதான் உண்மையான சந்தோஷம்....

இயேசு கிறிஸ்து மூலம் பிதாவுடன் நேரடியாக தொடர்பு கொள்வதுதான் உண்மையான ஜெபமாகும். கடந்த அதிகாரத்தின் முடிவில் நீங்கள் செய்த ஜெபம் பரம பிதாவுடன் தனிப்பட்ட முறையில் உங்கள் ஐக்கியத்தைப் புதுப்பித்துள்ளது. இந்த ஜெபத்தை முக்கியமாக நீங்கள் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும். பிதாவுடன் உறவை ஏற்படுத்திக்கொள்ள தொடர்பு மிகவும் முக்கியமாகும்.

பூமிக்குரிய தகப்பன்மார்கள் வேலை அதிகமாயிருப்பதால் தங்கள் பிள்ளைகளுடன் தொடர்புகொள்வதில்லை. ஆனால் நமது பரம பிதா நம்முடன் தொடர்புகொள்ள வாஞ்சையாயிருக்கிறார். ஒரு பிள்ளை தகப்பனுடன் உறவாடுவது போல நீங்கள் பரம பிதாவிடம் ஜெபிப்பதின் மூலம் உறவாடலாம். இதில் அவரைத் துதித்து நன்றி செலுத்து உங்கள் ஜெபக் குறிப்புகளை சேர்த்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் துதித்தலும் நன்றி செலுத்துவதுடன் ஜெபிக்கிறோம். தேவன் யாரென்றும் எப்படிப் பட்டவரென்றும் மனுக்குலத்திற்காக என்ன செய்தாரென்றும் இதில் வெளிப்படுத்துகிறோம். துதித்தல் என்பது தேவன் தம்மை யாரென்று நமக்கு வெளிப்படுத்துவதும் நன்றி செலுத்துவதில் அவர் யாராக இருப்பதினால் அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

தேவனை நினைக்கும்போது துதித்தலும் நன்றியறிதலும் இணைந்து செயல்படுகிறது. இதில் உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம், உணர்வுகள் மற்றும் சரீரமும் அடங்கி உள்ளன. நீங்கள் சத்தமிட்டு துதித்து நடனம் ஆடலாம். இசைக் கருவிகளுடன் பாடி கர்த்தரைத் துதிக்கலாம்.

உங்கள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் துதியும் ஸ்தோத்திரங்களின் மூலமாக தேவனின் அன்பை அவரிடம் வெளிப்படுத்தலாம். கர்த்தரை துதிப்பதற்கு எந்த குறிப்பிட்ட முறைகளும் வார்த்தைகளும் கிடையாது. தமது பிள்ளைகள் தம்மை நேசிப்பதினால் அவர்களுடைய வார்த்தைகள் துதிகள் மூலம் வெளிப்படுவதை கேட்க அவர் விரும்புகிறார். ஆகையால், அவருடைய நாமத்தை துதிக்கும் **"நமது உதடுகளின் கனியாகிய**

***ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் அப்போது தேவனுக்கு செலுத்தக் கடவோம்."***

***"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை ஆறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான அசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."***

ஆகவே எப்பொழுதும் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்தரியுங்கள். அவருக்குறிய மகிமையை மட்டும் செலுத்தினால் மகிழ்ச்சி உங்கள் இருதயத்தில் வழிந்தோடுவதை உணர முடியும். அவரைத் துதிப்பதால் தேவன் அதிசயமான காரியங்களைச் செய்வார்.

உண்மையான ஜெபத்தில் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதும் அடங்கும். எல்லா மக்களும் இரட்சிக்கப்படா விட்டாலும் எல்லாரின் இரட்சிப்புக்காகவும் இயேசு தமது ஜீவனை அளித்து மரித்து விலை கிரயத்தைச் செலுத்தினார். ஏனெனில் அநேகர் இயேசுவின் நாமத்தைச் சொல்லி கூப்பிட்டு இரட்சிக்கப் படுவதில்லை. நித்திய ஜீவன் இலவசமாக அனைவருக்கும் அளிக்கப் பட்டிருந்தாலும் அனைவரும் அதை விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளவேண்டும். அதேபோல் இயேசு பாடுபட்டு மரித்து நமது நோய்களையும், மனுக்குலத்தின் பிரச்சனைகளையும் சுமந்தபடியால் அநேகர் கூப்பிடாததினால் விசுவாசமில்லாததினால் குணமடையவில்லை.

பரம பிதாவாகிய தேவன் நம்மை ஆசீர்வதித்து, மன்னித்து, நமது தேவைகளை சந்தித்து நமது வாழ்வை வழிநடத்துகிறார் என்று ஏற்கனவே படித்திருக்கிறோம். ஆனால் இது தானாக நடைபெறாது. இங்கு தான் ஜெபத்தில் தேவனை கேட்டும் காரியம் தெளிவாகிறது. விசுவாசிக்கும் ஜெபம் என்றால் எப்படி தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

***"இந்த நிச்சயம் நமக்குள் இருக்கிறது. நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிக் கொடுப்பார். அவர் நமக்கு செவிக் கொடுக்கிறார் என்பதை நாம் அறிந்தால் நாம் கேட்டதை நமக்கு அளித்திருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறோம்."*** தேவனுடைய சித்தத்தின்படி கேட்பது என்பது அவருடைய வார்த்தைகளாகிய வாக்குத்தத்தத்தின் படி கேட்பதாகும்.

***"கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள். ஏனெனில் கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான். தட்டுகிறவனுக்கு திறக்கப்படுகிறது. தேடுகிற எவனும் கண்டடைகிறான். உங்களில் தன் மகன் அப்பத்தைக் கேட்டால் கல்லைக் கொடுப்பானோ? மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பானோ? முட்டையைக் கேட்டால் தேளைக் கொடுப்பானோ? பொல்லாதவர்களாகிய நீங்கள் நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரம பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நல்ல ஈவுகளை கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?"***



ஆகவே பரம பிதாவிடம் ஒர குழந்தையைப் போல் அணுகிச் செல்லவேண்டும். அவர் தமது குமாரனை அனுப்பி உங்கள் இடத்தில் உங்களுக்காக மரித்தார். இதனால் நீங்கள் தேவனுடன் ஐக்கியப் பட்டிருக்கிறீர்கள். மேலும் எல்லா விதமான ஆசீர்வாதங்களையும் அவர் உங்களுக்கு அளவில்லாமல் அளிப்பார். கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. ஆகவே அவரிடம் நெருங்கிச் செல்லுங்கள்.

***ஒரு சீஷர்கள் எப்படி ஜெபிப்பது என்று கற்று தருமாறு இயேசுவிடம் கேட்டார்கள். அதற்கு அவர், "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, உமது நாமம் பரிசுத்தப்படுவதாக, உமது ராஜ்யம் வருவதாக, உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்; எங்கள் கடனாளிகளை நாங்கள் மன்னிகிறது போல எங்கள் பாவங்களை மன்னித்தருளும். எங்களை சோதனைக்குட்படுத்தாதபடிக்கு தீமையிலிருந்து விலக்கி காத்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் என்றென்றும் உம்முடையது. ஆமென்!"*** என்றார்.

பிதாவிடம் நமது தேவைகளை சொல்லுவதற்கு முன்பாகவே அவர் நமது தேவைகளை அறிந்திருக்கிறார். அவருடைய நாமத்தை கனம் பண்ணுகிறோம். அவர் நமக்கு தகப்பனாயிருந்தாலும் கூட நாம் அவருக்கு கனத்தையும், மகிமையும், பயத்தையும் செலுத்த வேண்டும். தேவனுடைய ராஜ்யம் பூமியில் வரவும் அவருடைய சித்தம் பூமியில் செய்யப்படவும் இயேசு நமக்கு போதித்தார். அவருடைய ஆளுகை நமது வாழ்வில் காணப்பட வேண்டும். பரலோகத்தில் நடைபெறுவது எதுவாயிருப்பினும் அது பூமியில் நடைபெற வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும்.

எப்படி தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்க வேண்டுமென்பதை அறிவிப்பதற்கு இந்த சத்தியம் அதிசயமானது. நீங்கள் துக்கத்தோடிருக்கும்போது மகிழ்ச்சியை தேவன் பரலோகத்திலிருந்து அளிக்குமாறு ஜெபிப்பதுதான் தேவ சித்தமாகும். சோதனையும், துக்கமும், மனச்சோர்வும் பரலோகத்தில் நிலைத்திருப்பதில்லை.

நீங்கள் வியாதிப்பட்டு வேதனையிலிருந்தால் பரலோகத்தில் வியாதியும் வேதனையுமில்லாததினால் அந்த தேவ சித்தம் பூமியில் உங்களுக்குள் நிறைவேறும்படி ஜெபிக்க வேண்டும். ஆகவே வியாதியும் வேதனையும் நீங்கி போகுமாறு ஜெபிக்க வேண்டும்.

இயேசு நமது தேவைகளை அனுதினமும் சந்திக்குமாறு விரும்புகிறார். ஆனால் நாம் ஜெபிக்கும் ஜெபங்களில் உமது மகிமையிலுள்ள ஐசுவரியத்தின்படி நமது குறைவுகளையெல்லாம் நிறைவாக்கும் என்று நாம் ஜெபிக்க வேண்டும். காரியங்கள் எதுவாயிருப்பினும் அனுதினமும் நமது தேவைகளை சந்திக்குமாறு ஜெபிக்க வேண்டும். ஆகவே ***"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன்"*** என்பதை நினைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் பாவஞ்செய்தால் உடனே அதை அறிக்கையிட்டு, மன்னிப்பு கேட்டு ஜெபிக்கவேண்டும், ஏனெனில் ***"எல்லா அநியாயத்தையும் நீங்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்."*** நாம் மீட்கப் பட்டிருந்தாலும் பாவம் செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளன.

மற்றவர்களை மன்னிப்பது போல நமது குற்றங்களை மன்னிக்குமாறு இயேசு கற்பித்தார். ஏனெனில் தேவன் நம்முடைய பாவங்களை மன்னித்துள்ளார். சோதனைக்குட்படாதபடி தீமையிலிருந்து காத்துக்கொள்ளுமாறு இயேசு ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். சாத்தான் நம்மை சோதித்து பாவத்திற்குள்ளாக்குகிறார். நாம் சோதிக்கப்படும்போது பாவத்தை எதிர்த்து அதிலிருந்தும் தீமையிலிருந்தும் விடுதலை பெற ஜெபிக்க வேண்டும்.

***"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான். மாம்சமோ பெலவீன முள்ளது"*** என்று இயேசு கூறினார்.

***"நம்முடைய பெலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியர் நமக்கிராமல், நம்மைப் போல் எல்லா விதங்களிலும் சோதிக்கப்பட்டு பாவமில்லாமலிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார். ஆகவே ஏற்றக் காலத்தில் நமக்கு சகாயம் கிடைக்கும் என்ற நிச்சயத்துடன் கிருபாசனத் தண்டையில் தைரியமாய் கிட்டிச் சேரக்கடவோம்"*** என்று எழுதப்பட்டுள்ளது.

ஆகவே நாம் பாவஞ்செய்ய சோதிக்கப்படும்போது நமக்கு உதவிச் செய்யும்படி சோதனைகளை ஜெயித்த இயேசு நம்மோடு இருக்கிறார். நாம் கிருபாசனத் தண்டையில் தைரியமாக நெருங்கும்போது ஏற்றக் காலத்தில் நமக்கு உதவிச் செய்ய பரலோக பிதா ஆயத்தமாயிருக்கிறார்.



ஆகவே இயேசு, ***"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்தில் எவைகளையெல்லாம் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெற்றுக்கொள்ளுவோம் என்று விசுவாசியுங்கள் அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்"*** என்றார். இந்த முக்கியமான சத்தியத்தை நாம் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும். நாம் விசுவாசத்தில் ஆண்டவரை நோக்கி ஜெபிக்கும்போது அதை பெற்றுக்கொண்டோம் என்ற விசுவாசத்தில் காணப்பட வேண்டும். அந்த கேட்கப்பட்ட காரியத்தை காணாவிட்டாலும் கிடைத்துவிட்டது போல விசுவாசிக்க வேண்டும்.

காண்பது விசுவாசமல்ல, ஆனால் விசுவாசிப்பதுதான் பார்த்தல். இயேசு தோமாவை நோக்கி, ***"நீ என்னை கண்டதினாலே விசுவாசித்தாய். காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."*** என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பரம பிதாவின் வார்த்தைகளில் நமக்கு நம்பிக்கையிருப்பதால் விசுவாசிப்பதற்கு ஒரு பொருளை காணவேண்டிய அவசியமில்லை. ஆகவே, ***விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்.***

தேவனுடைய வார்த்தையை நம்புவதின் உண்மையை பொறுத்துதான் நாம் தேவன் மேல் வைத்துள்ள ஐக்கியம் அமைந்துள்ளது. சூழ்நிலைகள் எதுவாயிருப்பினும் நாம் தேவனுடைய வார்த்தையை அப்படியே விசுவாசிக்க வேண்டும். ஆகவே ஜெபிக்கும்போது கர்த்தருடைய வசனம் என்ன கூறுகிறதோ அப்படியே வாக்குத்தத்தமாக விசுவாசிக்க வேண்டும்.

***"பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் கரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்."***

***"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே, நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்."***

***"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."***

***"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்."***

***"இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை, கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள். இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன், காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக் குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்."***

பிதாவிடம் சொல்வதற்கு இயேசுவின் மூலமாக மட்டுமே முடியும். நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும்போது இயேசுவே பிதாவிடம் நேரடியாக கேட்பதற்கு இணையாகக் காணப்படும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும்போது விசுவாசத்துடன் காரியங்களை எதிர்பாருங்கள்.

***"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும், மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கின்ற வல்லமையின் படியே நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு"*** என்று எழுதப்பட்டுள்ளது.

***"நீங்கள் ஒன்றுக்குரிய கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து ஸ்தோத்திரத்தோடே கூடிய விண்ணப்பத்தினாலும், ஜெபத்தினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்."*** ஆகவே எந்த நேரத்திலும் உங்கள் கவலைகளை கர்த்தர் மீது சுமத்தி விடுங்கள்.



சில சமயங்களில் நமது கிறிஸ்தவ வாழ்வில் என்ன செய்வதென்று அறியாமலிருக்கிறோம். அப்பொழுது, ***"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவராயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும்; ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. ஏனெனில் இருமன முள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்."*** ஆகவே ஜெபிக்கும்போது தேவனிடத்தில் ஞானத்தை கேட்க வேண்டும்.

ஜெபம் என்பது தேவனிடம் தொடர்புகொள்ளும் ஜீவ நாடியாகும். எனவே ***"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்திடல் விழித்திருங்கள்." "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோமாயிருக்கிறது."***

பின்வரும் வசனங்கள் இயேசு ஜெபித்ததைக் குறித்து கூறுகின்றன : ***"அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு தனி ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறி சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார். அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு வனாந்திரமான ஓரிடத்திற்கு போய் அங்கே ஜெபம் பண்ணினார். அந்நாட்களிலே அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்"*** அவரோ வனாந்திரத்தில் தனித்துப்போய் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்.

ஜெபத்தின் மூலம் நாம் தேவனுக்கு நன்றி செலுத்தலாம் :

*பரலோக பிதாவே,*

*நீர் அற்புதராக இருப்பதற்காக உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தினால் ஜெபத்தின் மூலம் உம்மிடம் நெருங்கி வர என்னை அனுமதித்தபடியால் உமக்கு நன்றி. உமது அன்பை எனக்கு*

வெளிபப்டுத்தினதினால் உமக்கு நன்றி. உமது சிங்காசனத் தண்டையில் நான் தைரியமாக வருவதற்கு என்னை அழைத்த படியால் உமக்கு நன்றி. என் ஜெபத்தை கேட்டு பதில் அளித்த படியால் நன்றி. நான் கேட்பதற்கு முன்பதாகவே உமது பிள்ளையாகிய எனது தேவைகளை அறிந்து எனக்கு நல்ல ஈவுகளை எனக்கு தந்தபடியால் உமக்கு நன்றி. நான் எப்பொழுதும் உமது சித்தத்தின்படி ஜெபிப்பதற்காக உமது வார்த்தைக்குள் உமது சித்தத்தை எனக்கு வெளிப்படுத்தினபடியால் உமக்கு நன்றி.

பரலோகத்தில் உமது சித்தம் செய்யப்படுகிறது போல பூமியில் எனக்குள் உமது சித்தம் செய்யப்படுகிறதற்காக உமக்கு நன்றி. உமது ராஜ்யம் வருவதாக. உமது ஆளுகை என் வாழ்வில் நடைபெறுவதாக. நீர் என் குற்றங்களை மன்னிக்கிறது போல நான் மற்றவர்களின் குற்றங்களை மன்னிக்கும்படி உதவிச் செய்தபடியால் உமக்கு நன்றி. உமது மகிமையின் ஐசுவரியத்திலிருந்து என் குறைவுகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவேற்றுகிறதற்காக நன்றி. என் ஆத்துமா வாழ்கிறதுபோல நான் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க வைத்தபடியால் உமக்கு நன்றி. எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை எனக்கு தந்தபடியால் நன்றி. பாவமும், மரணமும் என் மீது அதிகாரம் செலுத்த முடியாதபடியால் உமக்கு நன்றி. இயேசு கிறிஸ்து மூலமாக நான் முற்றிலும் ஜெயங்கொண்டவனை விட மேலானவனாக இருக்கிறபடியால் உமக்கு நன்றி. பரிசுத்த ஆவியானவர் என்னை அனுதினமும் எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறதற்காக நன்றி. நீர் விரும்பும் வாழ்க்கையை வாழ எனக்கு கற்றுத்தாரும். என் ஜெபத்தை கேட்டபடியால் நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!

# பரிசுத்த ஆவிக்குள்ளான வாழ்வுதான் உண்மையான சந்தோஷம்

## அத்தியாயம் - ஆறு



பரிசுத்த ஆவிக்குள்ளாக வாழ்வதே உண்மையான சந்தோஷமாகும். இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட நேரத்திலிருந்தே பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கையை ஆளுகை செய்திருக்கிறார்.

நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் வெளிச்சமடைந்து ஆவியானவரால் மறுபடியும் பிறந்தீர்கள். அவர் உங்களுக்குள் வாழ்ந்து எல்லா நிலைகளிலும் உங்களை அவர் வழிநடத்துகிறார்.

நீங்கள் இயற்கையான காரியங்களைவிட அதிக உயரமாய் பறந்து வாழ்வை புரிந்து கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது உங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நீங்கள் உயிர்ப்பிக்கப்பட்டு கிறிஸ்துவுடனே கூட உயிர் வாழ்கிறீர்கள். உங்கள் வெற்றிக்கு முடிவே இல்லை.

நீங்கள் இதுவரை கண்டிராத வண்ணம் பரிசுத்த ஆவியானவர் எல்லா நிலைகளிலும் உங்கள் வாழ்வை வழிநடத்துவார். நீங்கள்

*தேவனுடைய பிள்ளைகளென்று தேவ ஆவியானவர் உங்களுடைய ஆவியுடனேகூட சாட்சி கொடுக்கிறார். இப்பொழுது அவர் உங்களை வழிநடத்தும்போது அவருடன் ஒத்துழைத்தால் எல்லாவற்றிலும் அவர் உங்களை வெற்றியின் பாதையில் வழிநடத்துவார்.*

## பரிசுத்த ஆவிக்குள்ளான வாழ்வுதான் உண்மையான சந்தோஷம்.............

இயேசு பரலோகத்திற்கு ஏறிச் செல்வதற்கு முன்பு தன் சீஷர்களை நோக்கி பின்வருமாறு கூறினார் :

***"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது, அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்."***

***"நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக."***

***"பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும் பிதாவினடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதி முதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."***

***"நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்."***

***"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார், நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்."***



***"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற் குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்."***

***"அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள், அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்."***

இயேசு மூன்றரை ஆண்டுகள் பூமியில் தமது சீஷர்களுடன் வாழ்ந்தார். அவரிடமிருந்து சீஷர்கள் கற்றுக்கொண்டார்கள். அவர் பரலோகத்துக்கு சென்றபோது இன்னும் அவர்களோடுதானிருந்தார். தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக ஒரே தேவனாக கிரியை செய்கிறார். திரித்துவ தேவனுடைய தன்மையை அறிந்துகொண்டு அவருடன் நல்ல ஐக்கியத்தை பரிபாலிக்க வேண்டும்.

நீங்கள் பரிசுத்த ஆவியானவரை முதலில் சந்தித்தபோது அவர் சிருஷ்டிகரை குறித்து உங்களுக்கு வெளிப்படுத்தினார். தேவனிடம் செல்வதற்கு இயேசுதான் ஒரே வழி என்று சுட்டிக்காட்டினார். நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டபோது ஆவியினாலே மறுபடியும் பிறந்தீர்கள். ஆவியானவராலே தெய்வீக வாழ்வை பெற்றிருக்கிறீர்கள்.

ஆவிக்குரியதும் காணக்கூடாததுமான ராஜ்யத்தை பரிசுத்த ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டு ஆவியானவராலே பிறந்தவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இயேசு ஒரு மனிதனிடம் பேசும் போது பின்வருமாறு கூறினார் :

***"இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்.***

***இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில்***

***பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம் காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது: ஆவியினாலும் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்."***

இன்றைய உலகிலும் ஆவிக்குரிய சத்தியத்தைக் குறித்து அறியாமலிருக்கிறார்கள். அவர்களுடைய மதச்சடங்காச்சாரங்கள், பாரம்பரியங்கள் மற்றும் நற்கிரியைகள் மூலம் தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது. இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதன் மூலம் ஆவியினால் மறுபடியும் பிறக்க முடியும். இயேசு தம்மை குறித்து, ***"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்னாலேயில்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான் என்றார்.*** பொதுமக்கள் உங்கள் புதிய வாழ்வின் தரத்தைக் குறித்து புரிந்துகொள்ளமாட்டார்கள்.

***"ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக் குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்பட்டான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது."***

ஆகவே பரிசுத்த ஆவியின் உதவியோடு இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவன். நீங்கள் சிந்திக்கிற விதமாய் சிந்திக்க முடியாது. நீங்கள் சிந்திக்கிற விதம் அவனுக்கு பைத்தியமாக தோன்றும்.

ஆகவே அவன் சிந்திக்கிற பிரகாரமாக நீங்கள் சிந்திக்காமலும் அவனுடைய முடிவுக்கு நீங்கள் அடிபணியாமலுமிருங்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கேற்றவைகளை சிந்திக்கும்படி உங்களுக்குள் கிறிஸ்துவின் சிந்தை காணப்படுவதால் அப்படி சிந்திப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார்.

***"பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துவார்." தேவனுடைய ஆவியியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். "நாங்களோ உலகத்தின்***



***ஆவியைப் பெறாமல் தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியை பெற்றோம்."***

பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியங்களை கற்றுத்தரும்படி விசுவாசிகளுக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது. ***"உங்களை வஞ்சிக்கிறவர்களை குறித்து இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டுவ தில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. அது உங்களுக்கு போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக."*** சாத்தானின் பொய்களுக்கும் தேவனுடைய சத்தியத்திற்குமிடையேயுள்ள வித்தியாசங்களை அறிந்துகொள்ளும் படி பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு போதிப்பார். ஆகவே மற்றவர்களின் சொல்லைச் சாராமல் தேவ ஆவியானவரையே சார்ந்திருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தை எழுதும்படி பரிசுத்த ஆவியானவர் தேவ மனிதர்களை வழிநடத்தினார். இயேசுவைக் குறித்தும் நித்தியத்தைக் குறித்தும் அறிந்து கொள்வதற்காக பரிசுத்த ஆவியானவர் நம்முடைய மனதை வழிநடத்துவார்.

அனுதினமும் பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியத்தை வைத்து பரிபாலித்து நமது அறிவினாலும், உணர்வினாலும், ஐம்புலன்களினாலும் அவரை அறியாமல் வேதத்தை படித்து தியானித்து அவரைக் குறித்து அறிந்துகொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு அவருடைய வார்த்தை முக்கியமானது.

பிசாசு எப்பொழுதும் போலித்தனமாக செயல்படுகிறவன். சத்தியத்தை பொய்யாக்குவதற்கு நம்மிடம் பல்வேறு பொய்களை கூறுகிறான். பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட சத்தியத்தை நாம் அறியும்போது சத்தியத்துடன் பிசாசின் பொய்களை ஒப்பிட்டு சத்தியங்களை அறிய முடியும்.

பிதா இயேசுவுக்கு அளித்த சத்தியத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகிறார். பரிசுத்த ஆவியானவர் நமது ஆவியுடன் தொடர்புகொள்ளும்போது அவர் தேவனுடைய சிந்தைகளை குறித்து பேசுகிறார். தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையும் பேசப்பட்ட வார்த்தையும் ஒன்றுதான்.

தேவனுடைய வார்த்தைக்கு முரண்பாடாக பரிசுத்த ஆவியானவர் நடத்துகிறார் என்று நாம் நினைத்தால் இது தேவனிடமிருந்து வரவில்லை என்று அறிகிறோம். பிசாசு நம்மை

தேவனிடத்திலிருந்துச் திசை திருப்ப முயற்சிக்கிறான் என்று அர்த்தமாகும்.

***"தேவனுடைய வசனம் இருபுறமும் கருக்கான எந்த பட்டயத்தைவிட கருக்கானதும் ஆவியையும், ஆத்துமாவையும் கணுக்களையும் ஊனையும், பிரிக்கிறதும் எண்ணங்களை வகையறுக் கிறதுமாயிருக்கிறது. தேவனுடைய வசனம் நமது கால்களுக்கு தீபமும், நமது பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது."*** தேவனுடைய வசனம் அவருடைய நன்மையும் பிரியமுமான சித்தத்தை நமக்கு உறுதியாக வெளிப்படுத்திக்காட்டும்.

அனுதினமும் ஆவியானவரிடமிருந்து வழிநடத்துதலை பெறுவதற்கு நமது சித்தத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். தேவன் விரும்புவதை நாம் விரும்ப வேண்டும். அப்பொழுது தேவனுடைய நன்மையும், பிரியமும் பூரணமான சித்தத்தை நிறைவேற்ற பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிச் செய்வார்.

தேவன் நமக்கு ஆயத்தம் செய்துள்ள வாழ்வை வாழ்வது போன்றுள்ள மகிழ்ச்சி வேறொன்றுமில்லை. நமது மீட்பருடன் ஐக்கியமாக வாழ்வதுதான் தேவன் உங்களைக் குறித்து விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலை நீங்கள் பின்பற்றும்போது தேவனுடைய சமாதானத்தையும் பிதாவின் பிரசன்னத்தையும் அனுபவிக்க முடியும்.

***"அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக் குரியவைகளைச் சிந்திக்கிறார்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்."***

***"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்."***

நமது எண்ணங்களை பரிசுத்த ஆவியின்மேல் பொருத்தி அவர் நமது சிந்தனைகளை ஆளுகைச் செய்ய அனுமதிக்க வேண்டும். நமக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை காணப்பட வேண்டுமென்று நாம் தேவனிடம் கட்டளையிட முடியாது. அவருக்கு கீழ்படிய ஆயத்தமாயிருக்க வேண்டும். நாம் பின்பற்றும்படி தேவன் நம்மை வழிநடத்துவார். அவருடைய சித்தம் என்னவாயிருந்தாலும் நாம் நிபந்தனையில்லாமல் அவருக்கு கீழ்படிய வேண்டும். அதன் மூலம் அவருடைய சித்தத்தை நாம் அறியலாம். தேவன் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு நாம் கீழ்படிய தயங்கினால் பரிசுத்த ஆவியானவரின் வழிநடுத்துதலுக்கு தடங்கலாயிருப்போம். எல்லா சூழ்நிலைகளிலும் பரிசுத்த



ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு நமது நன்மைக்காகவும், தேவனுடைய மகிமைக்காகவும் கீழ்படிய வேண்டும். ஆகவே பரம பிதாவுக்கு நிபந்தனையின்றி கீழ்படிய வேண்டும்.

***"புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்: விவேகி நல்லாலோசனைகளை அடைந்து, நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்துகொள்வான்."***

***"கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்."***

நமக்கு விருப்பமில்லாத வழிகளில் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தும்போது நாம் அதைக் குறித்து கவலைப்படக்கூடாது. அவர் தேவனுடைய சிந்தையை அறிந்திருக்கபடியால் நமது நன்மைக்கென்று நல்லவைகளையே வைத்திருக்கிறார். அவர் ஒருபோதும் தவறு செய்வதில்லை. ஆகவே அவரை முற்றிலும் நம்பி சார்ந்திருங்கள்.

நாம் கர்த்தருடன் நடக்கும்போது இடறினாலும் அவர் நம்மை சரியான பாதையில் வழிநடத்துகிறார். அவருடைய சித்தத்தை பகுத்தறிந்து அவருடைய நாமத்துக்கு மகிமையை கொண்டு வர விரும்புகிறார். நமது தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளும்படி தேவன் உதவுகிறார். இதனால் வருங்காலத்தில் அவருடைய வழிநடத்தும் குரலை அறிந்துகொள்வதற்கு உதவுகிறார்.

ஆவிக்குள்ளாக நடப்பதன் மூலம் தேவனை நாம் பிரியப்படுத்த முடியும். பரம பிதா விரும்புகிற பிரகாரம் வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களுக்கு இயேசுவை வெளிப்படுத்த வேண்டும். இதை ஆவியானவருடன் ஒவ்வொரு நிமிடத்திலும் நடப்பதன் மூலம் நிறைவேற்றலாம்.

***"ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்."***

***"ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்."***

ஒரு காலத்தில் நாம் பாவத்துக்கு அடிமைகளாயிருந்தோம். இப்பொழுது தேவன் விரும்புகிற பிரகாரம் வாழ்வதற்கென்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். இப்பொழுது நாம் இயேசுவைப் போல வாழ முடியும். அவரைப் போல வாழ்வதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவிச் செய்வார்.

***"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."*** நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடந்துக் கொள்வோம். வாழ்வதினால் ஆவியானவருடன் ஒருங்கிணைந்து வாழக் கற்றுக் கொள்வோம். கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கை வாழ பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தித் தருவார். இயேசுவின் வாழ்க்கை அன்பினால் நிறைந்திருக்கிறது. அன்புக்கு கிறிஸ்துவின் வாழ்க்கை கூறும் விளக்கத்தைப் போல் சிறந்த விளக்கம் வேறெதுவுமில்லை.

***"அப்படியே மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனை கொடுக்கவும் வந்தார்."*** அதேபோல பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்துகிறதுபோல அன்பின் வாழ்க்கை வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

இயேசுவின் வார்த்தைகளில் முழு நியாயப் பிரமாணமும் இரத்தின சுருக்கமாக சுருங்கிவிட்டது. ***"உன் தேவனுடைய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பெலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை. உன்னைப் போல் உன் அயலகத்தானையும் நேசிப்பாயாக. பிறன் உனக்கு எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."***

***"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், சாந்தம், தயவு, நற்குணம், விசுவாசம், இச்சையடக்கம், நீடிய பொருமை தங்களையே அர்ப்பணிக்கும்போது இந்த கனிகளை ஆவியானவர் உங்களுக்குள் உருவாக்குவார்."***

***"அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது, அன்புக்கு பொருமையில்லை தன்னை புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்***



***படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சலகத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது."***

***<u>பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவனுடைய அன்பு நமது இருதயங்களில் ஊற்றப்பட்டுள்ளது.</u>*** நாம் பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்படியும்போது, எல்லா சூழ்நிலைகளிலும் கிறிஸ்து நமது வாழ்வில் செய்வதின் அடிப்படையில் எந்த உணர்வுகளையும் பாராமல் செய்ய வேண்டும்.

நீங்கள் எல்லாவற்றிலும் உங்களை முதலில் வைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கிறிஸ்து உங்களை பூரணராக்கி உங்கள் வாழ்வின் வெள்ளிடங்களை நிரப்பியிருக்கிறார். பின்வரும் வசனங்களை வாசித்து, தியானித்து கீழ்படியுங்கள்.

***"நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள்.***

***கிறிஸ்து இயேசுவிலிருந்து சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்."***

பின்வரும் வசனங்களை படித்து அவைகளுக்கு கீழ் படியுங்கள், நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். ***"உங்கள் சத்துருக்களை நேசியுங்கள். உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை துன்புறுத்துகிறவர்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் வலது கன்னத்தில் ஒருவன் அறைந்தால் மற்றொரு கன்னத்தை திருப்பிக் காட்டுங்கள். உன் அங்கியை எடுத்துக்கொள்கிறவனுக்கு வஸ்திரத்தை அவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கேட்கிற***

***அவனுக்கு கொடுங்கள். உன்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்கிற வனிடத்திலிருந்து ஒன்றையும் திருப்பி கேட்காதீர்கள். மற்றவர்கள் உங்களுக்கு செய்ய விரும்புவதை நீங்கள் அவர்களுக்கு செய்யுங்கள்."***

***உங்களை சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்க ளானால் உங்களுக்கு பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரர்களை மாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவராயிருக்கக் கடவீர்கள்.***

***"குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களை தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கு அளக்கப்படும். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கி, குலுக்கி, நன்றாக சரிந்து விழும்படி மனுஷர் உங்கள் மடியிலே அளந்து போடுவார்கள். நீங்கள் எந்த அளவினாலே அளக்கிறீர்களோ அதே அளவினாலே உங்களுக்கு அளக்கப்படும்."***

கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு கீழ்படியும் அவருடைய வாழ்க்கையை வாழ்ந்து காட்டவும் பரிசுத்த ஆவியானவர் நம்மை எப்பொழுதும் வழிநடத்துவார். பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்படியுங்கள். அப்பொழுது நீங்கள் அவருடைய பிரசன்னத்தையும், வழிநடத்துதலையும் அனுபவித்து, பரம பிதாவோடும், இயேசுவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் நல்ல ஐக்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும். பரிசுத்த ஆவியானவர் நீங்கள் காண முடியாத அளவில் தெய்வீகமானவர். அவர் உங்களுக்குள் தம்மை வற்புறுத்திக்கொண்டு வரமாட்டார். உங்கள் வாழ்வில் அவரைக் குறித்து பகுத்தறிவுடன் காணப்பட்டு, இயேசுவை உங்களுக்குள் வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும். நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாய் எப்படி வாழ்கிறீர்கள் என்பது தான் முக்கியம். பின்வரும் வசனங்களை படியுங்கள். அவைகள் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாமலிக்க உங்களுக்கு உதவும் :

***"கெட்ட வார்த்தைகள் ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக்கேதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன முண்டாகும்படி பேசுங்கள்."***

***அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகல விதமான கசப்பும், கோபமும், துர்க்குணமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக் கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக் கொருவர் மன்னியுங்கள்.***



***ஆதலால் நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காக தம்மைத் தேவனுக்கு ஏற்ற வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்.***

***மேலும் பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும், தகாதவைகள், ஸ்தோத்திரஞ் செய்தலே தகும். விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சுதந்திர மடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கை-யாயிருங்கள். அவர்களுக்கு பங்காளிகளாகாதிருங்கள். முற்காலத்திலே நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.***

இந்த அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் யாரென்றும், அவருடன் எப்படி நெருங்கிய ஐக்கிய உறவை வளர்த்தெடுப்பதென்றும், அதன் மூலம் உண்மையான மகிழ்ச்சியை அனுபவிப்பதென்றும் கற்றுக்கொள்கிறோம். பின்வரும் வாக்கியங்கள் இயேசுவைப் பற்றி கூறுவதை படியுங்கள் :

***கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான். தட்டுகிறவனுக்கு திறக்கப்படுகிறது. தேடுகிறவன் கண்டடைகிறான். உங்கள் தகப்பனிடம் மீனை கேட்டால் பாம்பை கொடுப்பானோ? முட்டையைக் கேட்டால் தேளைக் கொடுப்பானோ? பொல்லாத மனிதர்களாகிய நீங்களே நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது பரம பிதா தம்மிடம் கேட்கிறவனுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?***

பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியத்தை வளர்த்துக்கொள்வதற்கு பின்வரும் ஜெபம் உதவியாக இருக்கும் :

*அன்புள்ள பரம பிதாவே!*

*பரிசுத்த ஆவியானவர் மூலம் என்னை உம்மிடம் நெருங்கி சேர்த்துக்கொண்டு எனக்கு நித்திய ஜீவனை அன்பளிப்பாக அளித்தபடியால் உமக்கு நன்றி. கேட்கிற எவனுக்கும் பரிசுத்த ஆவியை தருவதாக வாக்குத்தத்தம் செய்ததற்காக உமக்கு நன்றி. இப்பொழுதே பரிசுத்த ஆவியானவர் என் வாழ்வில் வந்து என்னை நிரப்பி வழிநடத்தும்படி கேட்கிறேன். இயேசுவை எனக்கு அவர் வெளிப்படுத்தி உமக்கென்று வாழ்வது எப்படியென்று எனக்கு கற்றுத் தருவாராக.*

*உமக்கு வாக்குத்தத்தத்தை காத்து இயேசுவை எனக்கு மேலும் உண்மையுள்ளவராக காட்டினபடியால் உமக்கு நன்றி. பரிசுத்த ஆவியானவரை நான் நன்றாக பகுத்தறியவும், அவரை ஒருபோதும் துக்கப்படுத்தாமலிருக்கவும் உதவிச் செய்யும். பரிசுத்த ஆவியானவர் என்னை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி இயேசுவை என் வாழ்வில் வெளிப்படுத்தும்படி உம்மை நம்புகிறேன்.*

*இந்த சத்திய ஆவியின் மூலம் எனக்கு கிறிஸ்துவின் சிந்தையும் இருப்பதால் பொய்யையும், சத்தியத்தையும் பகுத்தறிய ஞானத்தை எனக்கு அளித்தபடியால் உமக்கு நன்றி. தேவனுடைய வசனத்தினால் ஆவியை நான் பரிசோதிக்க முடியும். பரிசுத்த ஆவியானவர் மூலம் உமது அன்பு என்னுடைய இருதயத்தில் ஊற்றப்பட்டிருப்பதால் உமக்கு நன்றி. இதன் மூலம் உமக்கும், மற்றவர்களுக்கும் முன்பாக நல்ல வாழ்க்கை வாழ முடியும். நான் கிறிஸ்துவுக்குள் பூரணமாயிருப்பதால் உம்மை என் வாழ்வில் முதலிடமாக வைப்பேன்.*

*நான் பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்படிந்து ஆவியின் கனிகள் என் வாழ்வில் வெளிப்படுத்தப்படவும், அதனால் உமது நாமம் என் வாழ்வில் மகிமைப்படுவதாக.*

*என் வாழ்வு உமது மூலம் பயன்படுத்தப்படுவதற்கு நீர் என்னை உமது வல்லமையினால் நிரப்பும். நான் உமக்குரியவனாயிருப்பதால் உமக்கு நன்றி.*

*இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!*

## தேவனுக்கு உடன் பங்காளியாயிருப்பதே உண்மையான மகிழ்ச்சி

# அத்தியாயம் - ஏழு



*உண்மையான மகிழ்ச்சி என்பது தேவனுடன் பங்குதாரராயிருப்பதாகும். நமது சிருஷ்டிகருடன் நல்ல பங்குதாரனாக வாழ்வது நமது வாழ்வில் அதிகமாய் பலனளிக்கும் அனுபவமாகும். இவ்வாறுதான் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் உயர்ந்த நோக்கத்தையும் உயர்தரமான திறமைகளையும் அடைகிறோம்.*

*தேவனுடன் நாம் பங்குதாரராக வாழ்வதுடன் இந்த உலகத்தின் எந்த அனுபவங்களையும் ஒப்பிட்டு பார்க்க முடியாது. தேவனுடைய திட்டங்களையும், நோக்கங்களையும் நிறைவேற்றும்படி தேவனுடன் அனுதினமும் உறவுகொள்வதன் மூலமாகவும் மற்றவர்களுடன் நமது வாழ்க்கை தொடர்புகொள்வதன் மூலமாகவும், நமது ஆழ்ந்த இன்பத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வரும்.*

*தேவனுடன் உறவுகொள்ளாமல் வாழ்வதினால் நமது வாழ்வில் அர்த்தமில்லாமலும் வெறுமையாகவும் மாறுகிறது. ஆனால் நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறக்கும்போது நீங்கள் தேவனுடன் பங்குதாரராகிறீர்கள். பரிசுத்த ஆவியானவரின்*

*வல்லமையினால் இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கையை நீங்கள் வாழ முடியும்.*

*சீஷர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் வசனத்தைப் பிரசங்கித்தார். கர்த்தர் அவர்களுடனே கூட கிரியை நடப்பித்து அவர்களால் நடந்த அற்புத அடையாளங்களால் தமது வசனத்தை உறுதிப்படுத்தினார். இப்பொழுது அவர் உங்களுடன் இணைந்து கிரியை செய்ய விரும்புகிறார்.*

## தேவனுக்கு உடன் பங்காளியாயிருப்பதே உண்மையான மகிழ்ச்சி.......

முந்தின அதிகாரத்தில் உங்கள் தனிப்பட்ட வாழ்வில் மாம்சத்திலும், உலகம், மற்றும் பிசாசின் மீது எப்படி வெற்றி அடைவது என்றும், அதற்கு பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வில் எப்படி ஊழியம் செய்கிறார் என்றும் பார்த்தோம். இப்பொழுது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் தேவனுடன் எப்படி பங்குதாரனாக வாழ்வது என்ற தலைப்புக்குள் கடந்து செல்வோம்.

மனிதனுக்கும் தேவனுக்குமிடையே இப்படித்தான் வாழ்க்கை காணப்படுகிறது. பூமியில் தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்ற தேவன் மனிதர்கள் மூலமாக கிரியை செய்கிறார். முதல் அதிகாரத்தை நினைத்துப்பாருங்கள்.

ஆதாமும் ஏவாளும் தங்கள் சிருஷ்டிகருடன் இணைந்து வாழ்ந்தபோது அற்புதமான வாழ்க்கை அவர்களுக்கு காணப்பட்டது. தேவன் அவர்களுக்கு எல்லா உயிரினங்கள் மேலும் அதிகாரத்தை அளித்து, பலுகி பெருகி பூமியை நிரப்பவும் ஆண்டுகொள்ளும் படியும் கட்டளையிட்டார். மிருகங்களுக்கு பெயரிடுமளவில் சகல அதிகாரத்தையும் தேவன் அவர்களுக்கு அளித்தார்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு அதைவிட அதிக பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. நாம் இயேசுவை நமது இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகு மற்றவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தும் பொறுப்பை பெற்றிருக்கிறோம்.

இயேசு பூமியில் வாழ்ந்தபோது எப்படி வாழ்ந்தாரோ அதேபோல் வாழும்படி நாம் தேவனால் நடத்தப்படுகிறோம். தேவனை மனிதர்களுக்கு அறிவிப்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட வேலையாகும். இதை பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே செய்ய முடியும். இயேசுவின் மூலம் கிரியை செய்த அதே பரிசுத்த ஆவியானவர் நமது மூலம் தேவனை மக்களுக்கு வெளிப்படுத்த விரும்புகிறார்.



***"ஆதலால் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரை தொழுதுகொள்வார்கள்? அவரை குறித்து கேள்விப் படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்?"*** இயேசுவை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் பணியில் நீங்கள் முக்கியமானவர்கள். உங்கள் மூலமாக தான் மக்கள் இயேசுவை அறிந்துகொள்வார்கள்.

நீங்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளாமலிருப்பது சரியல்ல. மக்கள் இயேசு கிறிஸ்துவை குறித்து கேள்விப்படாமல் அவர்கள் மரித்து நரகத்திற்குள் செல்வதற்கு நீங்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

ஒரு மனிதன் மற்றொரு மனிதனை நேசிப்பதின் அடையாளம் என்னவெனில் அவன் அவனுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவிப்பதாகும். இதனால் அவன் விசுவாசித்து ஆண்டவரை நோக்கி கூப்பிட்டு இரட்சிக்கப்படுவான். ஆனால் அந்த இயேசு அவர்களுக்காக மரித்தாரென்று கேள்விப்படாவிட்டால் கர்த்தரை நோக்கி கூப்பிடமாட்டார்கள். இயேசுவே மக்கள் தேவனிடம் திரும்பி செல்வதற்குரிய ஒரே வழியாகும்.

நீங்கள் இந்த பூமியில் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருப்பதற்கும், உங்களை இப்பொழுது பரலோகத்திற்குள் எடுத்துக்கொள்ளாமலிருப்பதற்கும் ஒரே காரணம் என்னவெனில், நீங்கள் இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதாகும். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு தேவன் ஒருவரை பயன்படுத்தினார். இப்பொழுது நீங்கள் அதே காரியத்தை மற்றவர்களுக்கு செய்யும்படி விரும்புகிறார்.

உங்கள் மூலம் மற்றவர்களை கிறிஸ்துவிடம் கொண்டு வருவதற்கு வழிகாட்டும் வசனங்களை கீழே படிக்கலாம் :

***"இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாகுதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கி ஒப்புரவாகுதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே தேவன் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல நாங்கள் கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதிகளாயிருந்து தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். நாம்***

***அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."***

இந்த வசனங்கள் நீங்கள் தேவனுடைய புது சிருஷ்டிகள் என்றும், கிறிஸ்துவுடன் பங்குதாரர்கள் என்றும், அவருடன் ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றும் கூறுகிறது.

தேவன் நம்மை அவருடன் ஒப்புரவாக்கினது மட்டுமின்றி நம்மிடம் ஒப்புரவாகுதலின் ஊழியத்தை ஒப்படைத்துள்ளார். இந்த ஊழியத்தை இப்பொழுது நீங்கள் மற்றவர்களுக்கென்று செய்ய முடியும்.

இப்பொழுது நீங்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளும் பிரதிநிதிகளுமாயிருக்கிறீர்கள். இந்த சிலாக்கியத்தை தேவன் உங்கள் மீது அளித்திருக்கிறார். நீங்கள் செல்லுமிடமெல்லாம் மக்களுக்கு சமாதானத்தின் செய்தியை அறிவிக்கும் தூதராக இருக்கிறீர்கள். கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாகிய நீங்கள் ஒப்புரவாகுதலின் ஊழியத்துக்கென்று எல்லாவற்றையும் பெற்றிருக்கிறீர்கள். இயேசுவை மக்கள் வாழ்வில் வெளிப்படுத்தும்படி நீங்கள் புறப்பட்டு செல்லலாம்.

ஒப்புரவாடுதலின் ஊழியத்தை மட்டுமல்ல, ஒப்புரவாகுதலின் செய்தியையும் தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ளார். அதாவது ***"தேவன் உலகத்தாருடைய பாவத்தை என்னாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கி."***

என வாசிக்கிறோம், இது அநேகர் பாவத்தைக் குறித்து அறிந்தாலும் தேவனை விட்டு விலகி ஓடுகிறார்கள். தேவன் அவர்களை கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாக்கினாரென்றும் அவர்களுடைய பாவங்களை எண்ணவில்லை என்ற செய்தியையும் அவர்கள் கேள்விப்படவில்லை. அவர்கள் இந்த நற்செய்தியை கேள்விப் பட்டால் தங்களை சிருஷ்டித்த தேவனிடம் திரும்பிவிடுவார்கள்.

இயேசு அவர்களுடைய பாவத்துக்காக அவர்களுடைய இடத்தில் மரித்தார் என்ற செய்தியை நீங்கள் அறிவிக்கும்படி தேவன் உங்களை தெரிந்தெடுத்திருக்கிறார். அவர்களுடைய பாவங்களுக்காக இயேசு தமது இரத்தத்தை சிந்தினாரென்றும், பாவத்திலிருந்து விடுதலையாக்கினாரென்றும் அவர்கள் கேள்விப்பட வேண்டும். அவர்கள் கேள்விப்படாத ஒன்றை அவர்கள் விசுவாசிக்க மாட்டார்கள்.

***"தேவன் உலகத்தாருடைய பாவங்களை என்னாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கி"*** என்பதை அவர்கள் உங்கள் மூலமாக கேட்க வேண்டும். ***நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத இயேசுவை தேவன்***



***நமக்காக பாவமாக்கினார்,*** என்றும் உங்களிடமிருந்து கேள்விப்பட வேண்டும்.

***தேவன் தமது ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்,*** என்றும் உங்களிடமிருந்து கேள்விப்பட வேண்டும்.

***பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வரமோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்,*** என்றும் அவர்கள் கேள்விப்பட வேண்டும்.

***கிருபையினாலே விசுவாசித்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டோம். இது நம்மால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல,*** என்றும் கேள்விப்பட வேண்டும்.

***குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; குமாரனில்லாதவன் ஜீவனில்லாதவன்,*** என்றும் அவர்கள் கேள்விப்பட வேண்டும். ***கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் வாயினாலே அறிக்கையிட்டால் நீ இரட்சிக்கப்படுவாய்,*** என்றும் அவர்கள் கேள்விப்பட வேண்டும்.

***கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்,*** என்றும் கேள்விப்பட வேண்டும்.

***அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களுக்கும் அவருடைய பிள்ளைகளாகும்படி அதிகாரங்கொடுத்தார்,*** என்றும் அவர்கள் கேள்விப்பட வேண்டும்.

***விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்*** என்று நினைத்துக்கொள்ளுங்கள். ஆகவே நீங்கள் ஒவ்வொரு நாளும் சந்திக்கும் மக்களிடம் நற்செய்தியை பகிர்ந்துகொள்ள வேண்டும். இயேசு அவர்களுக்காக என்ன செய்தார் என்பதை கேள்விப்படும்போது அவர்கள் மனந்திரும்பி நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். ***தேவன் பட்சபாதமுள்ளவரல்ல.*** உங்களுக்கு என்ன செய்தாரோ அதை உங்கள் மூலம் மற்றவர்களுக்கு செய்யும்படி விரும்புகிறார். நீங்கள் ***இலவசமாய் பெற்றீர்கள் இலவசமாய் (மற்றவர்களுக்கு) கொடுக்கும்படியாகவே*** தேவன் உங்களை இந்த உலகத்தில் வைத்திருக்கிறார்.

***நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும் சகலவித ஆறுதலின் தேவனிலிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம், தேவனால் எங்களுக்கு***

***அருளப்படுகின்ற ஆறுதலினாலே எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்ய திராணியுள்ளவர் களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.***

நீங்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட சமாதானம், கிருபை, ஆறுதல் மற்றும் மன்னிப்பை மற்றர்வர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதுதான் தேவன் உங்கள் வாழ்வில் தேவன் வகுத்து வைத்திருக்கும் திட்டமாகும். மற்றவர்களுடைய வாழ்வில் உண்மையான மகிழ்ச்சியை நீங்கள் கொண்டு வரும்போது உங்கள் வாழ்வில் பெரிய மகிழ்ச்சி ஏற்படும்.

ஆதியிலே தேவன்; மனிதர்களை படைத்துவிட்டு, ஆசீர்வதித்து அவர்களை நோக்கி, ***"பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள்"*** என்றார். இயேசு கூறுகையில், ***"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களை தெரிந்துகொண்டு உங்களை நியமித்தேன். ஆகவே நீங்கள் புறப்பட்டுச் சென்று மிகுந்த கனிகளை கொடுங்கள். அப்பொழுது என் பிதாவிடம் என் நாமத்தினால் எதைக் கேட்டாலும் பிதா அதை உங்களுக்குத் தருவார்."***

தேவனுடைய மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டு அதை மக்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதுதான் தேவனுடைய திட்டம். இயேசுவின் மூலம் பிதா எப்படி செய்தாரோ அதேபோல கிறிஸ்துவின் வாழ்க்கை உங்கள் மூலம் மற்றவர்களுக்குள் வாழ்ந்து காட்டப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற காரியங்களை தானும் செய்வான். என்னிலும் பெரிய காரியங்களைச் செய்வான். ஏனெனில் நான் பிதாவிடம் செல்கிறேன். பிதாவுக்கு மகிமையுண்டாகும் படி என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் தருவேன்" என்று இயேசு கூறினார்.

***என்னில் நிலைத்திருங்கள். நானும் உங்களில் நிலைத் திருப்பேன். கொடியானது திராட்சை செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சை செடி. நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்ய கூடாது.***

நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும்போது வெற்றிகரமான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பெலப்படுத்தும்படி கேட்க வேண்டும். இயேசு செய்த



கிரியைகளை நாம் நமது சொந்த பெலத்தினால் செய்ய முடியாது. ஏனெனில் இயேசுவையல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. இயேசு கூறியுள்ளதை கவனித்துப் பாருங்கள்.

***"இயேசு தன் சீடர்களுக்கு கடைசியாக கொடுத்த கட்டளையை பாருங்கள் நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாச முள்ளவனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.***

***விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன; என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளை பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றை குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.***

***இவ்விதமாய் கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு அவர் பரலோகத்திற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டு போய் எங்கும் பிரசங்கித்தார்கள். கர்த்தர் அவர்களுடனே கூட கிரியை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களினாலே தமது வசனத்தை உறுதிப்படுத்தினார்.***

இயேசு தமது சீஷர்களிடம் வசனத்தை பிரசங்கிக்குமாறுக் கொடுத்த கட்டளை ஆச்சரியமாயுள்ளது. எங்குமுள்ள எல்லலோருக்கும் பிரசங்கம் என்பது முக்கியமானதொன்றாய் உள்ளது. அவர்களுடனிருந்து கிரியை நடப்பித்ததைக் குறித்து படிப்பது ஆச்சரியமாயுள்ளது. இவை எல்லாவற்றிலும் பரிசுத்த ஆவியானவரின் பங்கு மிகவும் முக்கியமாக காணப்படுகிறது. நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாய் உள்ளோம். நம்முடைய ஜெயத்திற்கு பரிசுத்த ஆவியானவர் எவ்வளவு முக்கியம் என கீழ்காணும் வசனங்கள் காட்டுகின்றன. உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேமில் காத்திருங்கள். ***யோவான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான். இன்னும் சில நாட்களில் நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*** இவைகளை அவர் சொன்ன பின்பு அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அப்படியே காத்திருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்.

***"பெந்தேகொஸ்தே என்ற நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு கூடி ஓரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்துவங்கினார்கள். வானத்தின் கீழிருக்கிற சகல சேத்தாரிலிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு இதோ பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க நம்மில் அவரவருடைய ஜென்ம பாஷையிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே இதெப்படி? ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவை தேவன் ஆண்டவரிடம் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள். பார்த்தரும், மேதரும், எலாமித்தியரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும் சிரேனே பட்டணத்தை சுற்றியிருக்கிற லிபியாவின் திசையிலே குடியிருக்கிறவர் யூதரும், யூதமாத்தவரும் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்கிறோமே என்றார்கள்."***

சாதாரண மக்கள் பரிசுத்த ஆவியானவரால் பெலப்படுத்தப் பட்டதினால் இயேசுவின் நற்செய்தியை அவர்கள் உலகமெங்கும் பிரசங்கித்தார்கள். அவர்கள் இயேசுவைக் குறித்து பிரசங்கித்ததினால் நடைப்பெற்றதை கீழே குறிப்பிடுகிறேன்.

***நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயினாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும் தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியும் அவருடைய முன்னறிவிப்பின்படியும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்து கொலை செய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட கூடாதிருந்தது. இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.***



***இதை மக்கள் கேட்டபோது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" என்றான்.***

***இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்திச் சொன்னான். அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.***

***அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்யோந்நியத்திலும், அப்பம் பிட்டுதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். எல்லாருக்கும் பயம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும், அடையாளங்களும் செய்யப்பட்டது. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.***

இங்கு ஆதித்திருச்சபை எவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட தென்பதின் சுருக்கமான வரலாறு கூறப்பட்டுள்ளது. அற்புதங்களும் அடையாளங்களும் இயேசுவின் நாமத்தில் நடந்தன. தொடர்ந்து அற்புதங்கள் நடந்தன. இவைகள் எப்படி அநேகருடைய ஜீவியத்தை மாற்றிற்று எனவும் அறியலாம். இன்று பரிசுத்த ஆவியானவராலே விசுவாசிகள் மூலமாய் கர்த்தர் பெரிய காரியங்களை செய்கிறார்.

***ஒருநாள், ஜெப வேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில் பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்கு போனார்கள். அப்பொழுது பிறவிச் சப்பாணி ஒருவனைக் கொண்டு வந்து தேவாலயத்தின்***

***அலங்கார வாசற்படியில் வைத்தார்கள். பேதுருவும், யோவானும் அவனை உற்றுப் பார்த்து, பொன்னும், வெள்ளியும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்றான்.***

***வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால்களும், கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து, நின்று நடந்து தேவனைத் துதித்துக்கொண்டு அவர்களுடனே கூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அதை ஜனங்களெல்லாரும் கண்டு, தேவலாயத்தில் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தவன் இவன்தான் என்று அறிந்து அவனுக்குச் சம்பவித்ததைக் குறித்து மிகவும் ஆச்சரியப் பட்டார்கள்.***

***பேதுரு அவர்களை நோக்கி, இஸ்ரவேலரே இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுய சக்தியினாலாவது எங்கள் சுய பக்தியினாலாவது இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன? பரிசுத்தம் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து கொலை பாதகனை உங்களுக்காக விடுதலைபண்ண வேண்டு மென்று கேட்டு, ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள். அவரைத் தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.***

***சகோதரரே நீங்களும் உங்கள் அதிகாரங்களையும் அறியாமையினாலே அவரை சிலுவையில் அறைந்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன். கிறிஸ்து பாடுபட வேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார். ஆனபடியினாலே உங்கள் பாவம் நிவர்த்தியாகும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். உலகத்தோற்ற முதல் தேவன் தீர்க்கதரிசிகளை கொண்டு உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் திருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்."***

அன்றிருந்த அரசியல் தலைவர்களால் பேதுருவும், யோவானும் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் ***விசுவாசத்துடன் கேள்விப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். விசுவாசிகளின் எண்ணிக்கை ஐயாயிரமாக பெருகியது.*** உபத்திரவங்களின் மத்தியிலும் சீஷர்களின் எண்ணிக்கை பெருகியது. ***அடுத்த நாளிலே அதிகாரிகள் பேதுருவையும், யோவானையும் நடுவே நிறுத்தி, நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள். பேதுரு பரிசுத்த ஆவியினாலே***



***நிறைந்து, பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்கு செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானான் என்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்து கேட்டால், உங்களால் சிலுவையில் அறையப்பட்டாவரும் தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாக சொஸ்தமாய் நிற்கிறான் என்று உங்கள் எல்லாருக்கும் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கக் கடவது.***

***அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவில்லை என்றான்.***

அதிகாரிகள் உடனே அவர்களை விடுவித்தான். இனிமேல் இயேசுவின் நாமத்தை உச்சரிக்கக் கூடாதென்று அவர்களை எச்சரித்து அனுப்பினான். ஆனால் பேதுருவும், யோவானும் திரும்ப வந்து மக்களுடன் சேர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

***இப்பொழுதும் கர்த்தாவே அவர்களுடைய பயமுறுத்துதல்களை தேவரீர் கவனித்து, உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும், அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும் என்றார்கள்.***

***அவர்கள் ஜெபம் பண்ணி முடித்தபோது அவர்கள் கூடி இருந்த இடம் அசைந்தது. அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு வேத வசனத்தை தைரியமாய்ச் சொன்னார்கள்.***

***கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள். அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நிலங்களையும், வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலர்களின் பாதத்திலே வைத்தார்கள். அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றுக்கும் குறைவாயிருந்ததில்லை.***

இயேசு பூமியிலிருந்த நாட்களில் இயேசுவை வெளிப்படுத்தின அதே பரிசுத்த ஆவியானவர் இயேசு பரலோகத்துக்கு ஏறிச் சென்ற பிறகு அதை மீண்டும் விசுவாசிகளைக் கொண்டு அப்படியே செய்தார்.

***இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின ஆவி சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிக்கும்.*** அதே ஆவியானவர் உங்களுக்குள்ளிருந்து இயேசுவை உங்கள் மூலம் வெளிப்படுத்துவார்.

அன்பும், தைரியமும், வல்லமையும் அன்றிருந்த விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்பட்டது. நீங்களும் உங்கள் நண்பர்களுக்கு சாட்சி கூறும்போது இதே வல்லமைகளை தேவன் தருவார்.

‘‘தேவனுடன் பங்குதாரராக இருப்பதே உண்மையான மகிழ்ச்சியாகும்.’’ இதனால் நாம் நற்செய்தியை அறிவிக்க மற்றவர்களிடம் செல்வோம். அப்பொழுது அவர் அற்புத அடையாளங்களினால் தமது வசனங்களை உறுதிப்படுத்துவார்.

தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்ற உங்கள் வாழ்வை அனுமதித்தால் உங்களுக்குள் அளவில்லாத மகிழ்ச்சி நிரம்பி வழியும். பரலோகத்தில் மகிமையை அனுபவிப்பதைவிட இந்த மகிழ்ச்சி சொல்ல முடியாத அளவில் காணப்படும். இயேசுவை முகமுகமாய் பார்ப்பீர்கள். அவர் உங்களை நோக்கி :

***"நல்லது, உண்மையும் உத்தமுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தாய், இதோ உன்னை அநேகத்தின் பேரில் அதிகாரியாக்குகிறேன். உன் எஜமானனின் சந்தோஷத்திற்குள் பிரவேசி***" என்பார்.

இந்த புத்தகத்தை வாசிக்க துவங்கிய நாள் முதல் நீங்களும் நினைத்ததைவிட அதிகமாய் உங்கள் வாழ்க்கை இயேசுவின் ஆசீர்வாதங்களினால் நிரப்பப்படுவதை உணரலாம். இந்த சந்தர்ப்பம் உங்களை நழுவ விடாமலும் பிசாசு உங்களை வஞ்சிக்காமலுமிருக்க பாதுகாத்து கொள்ளுங்கள்.

நித்திய ஜீவனை வாழ்க்கை முழுவதும் அனுபவித்து வாழுங்கள். ***தேவனிடம் நெருங்கி வாருங்கள் அப்பொழுது அவர் உங்களிடம் நெருங்கி வருவார்.***

இந்த புத்தகத்திற்கு பின்னாலுள்ள பிற்சேர்க்கையை படித்துவிட்டு இலவசமான புத்தகத்தை பெறுவதற்குரிய படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புங்கள். அப்பொழுது மேலும் பல்வேறு புத்தகங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். இந்த புத்தகத்தை படித்துவிட்டு மற்றவர்களிடம் படிப்பதற்கு கொடுங்கள். ***"இலவசமாய் பெற்றீர்கள். இலவசமாய்க் கொடுங்கள்!"***



தேவனுடன் பங்குதாரராயிருப்பதற்கு பின்வரும் ஜெபத்தைச் செய்யுங்கள் :

*பரலோகப் பிதாவே,*

*உமது குமாரனை எனக்காக மரிக்கும்படி அளித்தபடியால் அதினிமித்தம் உம்மிடம் திரும்பி வரவும், உமது பிள்ளையாக மாறவும் உதவிச் செய்தபடியால் உமக்கு நன்றி. நீர் என் வாழ்வில் அளித்துள்ள எல்லா உதவிகளுக்காகவும் நன்றி. எனது தேவைகளை எல்லாம் சந்தித்ததற்காக நன்றி.*

*இப்பொழுது என்னை மட்டும் இரட்சிக்காமல் பரிசுத்த ஆவியானவர் மூலம் மற்றவர்களுக்கு இந்த வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளுவதற்கு உதவிச் செய்ததற்காக நன்றி.*

*தேவனுடைய பிரதிநிதியாகிய நான் உம்மிடமிருந்து வரும் அழைப்பை ஏற்றுக்கொள்கிறேன். உமது வல்லமையினால் மட்டுமே இந்த பொறுப்பை நிறைவேற்ற முடியும் என்று நம்புகிறேன்.*

*உமது பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பும். இதனிமித்தம் நீர் என்னை அழைத்ததின் நோக்கத்தை நிறைவேற்ற உதவிச் செய்யும். பரிசுத்த ஆவியானவரே நீர் எனக்குள் வந்து என்னை முற்றிலும் நிரப்பி, இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் நிரப்பும். இதனால் நான் இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிப்பதன் மூலம் இயேசு மகிமைப்படுவாராக!*

*இயேசுவே நீர் வாக்குரைத்தபடி உமது பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பினதற்காக நன்றி. இந்த பரிசுத்த ஆவியானவரை விசுவாசத்தினால் பெற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை மக்களுக்கு அறிவிப்பேன், வியாதியஸ்தர்கள் மீது கைகளை வைத்து ஜெபிப்பேன், பிசாசுகளை இயேசுவின் நாமத்தில் துரத்துவேன், நீர் என்னோடிருந்து நடத்தும் அற்புத அடையாளங்களால் உமது வசனத்தை உறுதிப்படுத்துவீர்.*

*என் மூலம் ஆவியின் கனிகள் வெளிப்படுத்தப்படுவதினால் நான் பரிசுத்த ஆவியானவருக்குள் அனுதினமும் நடப்பேன். தேவனுக்கும் எனது அயலகத்தாருக்கும் எனது வாழ்க்கையை நீர் விரும்புகிறபடி எல்லா இடங்களிலும் பயன்படுத்தியருளும். உம்மை நான் பின்பற்றும்போது கிறிஸ்துவின் வரங்களை என் மூலம் வெளிப்படுத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!*

# பிற்சேர்க்கை

இந்த பிற்சேர்க்கையில் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளும், கனி கொடுக்கும் கிறிஸ்தவர்களாயிருக்கும்படி மேலும் பல்வேறு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

முதலில் ஞானஸ்நானம் என்ற பாடத்தை காணலாம். வேதாகமத்தின்படி மக்கள் தண்ணீரில் மூழ்கி பிறகு அதைவிட்டு வெளியேறும் காரியத்தை கிறிஸ்துவுக்கு கீழ்படிவதாகவும், ஞானஸ்நானம் என்றும் கருதப்படுகிறது.

***இயேசு ஜனங்களை நோக்கி, "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."***

***மீண்டும் இயேசு அவர்களிடம், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நீங்கள் சகல நாடுகளுக்கும் புறப்பட்டுப் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்டவைகளை எல்லாம் அவர்கள் கைக் கொள்ளும்படிக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களோடிருக்கிறேன்."*** என்றார்.

இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கெண்டிருப்பதின் வெளிப்புற அடையாளமாக ஒரு கிறிஸ்துவன் ஞானஸ்நானத்தின் மூலம் பகிரங்கமாக அறிக்கையிட்டு உறுதிப்படுத்துகிறான். ஒரு விசுவாசிக்குள் ஏற்கனவே நடைபெற்றிருக்கும் ஆவிக்குரிய மாற்றத்தையே ஞானஸ்நானம் வெளிப்படுத்துகிறது.

பின்வரும் வசனங்கள் ஒருவன் விசுவாசித்த பிறகு ஞானஸ்நானம் பெறுவதை வலியுறுத்தி காட்டுகின்றன :

***"நீங்கள் மனந்திரும்பி பாவம் மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் அவருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்."***

***பிலிப்பு அவர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தவுடன் புருஷரும், ஸ்த்ரீகளும் ஞானஸ்நானம்***



***பெற்றார்கள். பிறகு பிலிப்பு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தான். அவர்கள் தண்ணீரண்டையில் வந்தபோது, மந்திரி, இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுவதற்கு தடை என்ன? என்றான். உடனே பிலிப்பு, நீ உன் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடை இல்லை. உடனே மந்திரி, "நான் இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்" என்றான். அவர்கள் தண்ணீரில் இறங்க பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.***

***நம்மைப்போல பரிசுத்த ஆவியை பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டார்.***

***ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் முழு வீட்டாரும் கர்த்தரை விசுவாசித்தார்கள். விசுவாசிகளான கொரிந்தியர்கள் அவனை கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.***

ஞானஸ்நானம் என்பது இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் ஒன்றுபடுவதைச் சுட்டிக்காட்டுகிறது.

***கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல் நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துக்கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்தானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படடோம்.***

ஆகவே நீங்கள் கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்படிந்தால் ஞானஸ்நானம் பெறுங்கள். மற்றவர்களுக்கு கிறிஸ்துவின் ஜீவனை அளிப்பதற்கு இதுதான் அற்புதமான வழியாகும். மற்றவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்துமாறு நீங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும். மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியமாயிருப்பது உங்களையும் அவர்களையும் பெலப்படுத்தும். தேவன் உங்களுக்கு செய்தது மற்றவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்.

புது விசுவாசிகள், ஜெபம், ஐக்கியம், சாப்பிடுதல், வசனத்தை கேட்குதல், தேவனைத் துதித்தல், மற்றவர்களின் பொருளாதார தேவைகளை சந்தித்தல், வெளியே புறப்பட்டு சென்று நற்செய்தியை பகிர்ந்துகொள்ளுதல் போன்ற காரியங்களில் செயல்படுவதை இந்த ஏழாம் அதிகாரத்தில் நீங்கள் காணலாம்.

***"தேவனை துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார். பேதுரு சிறைச் சாலையிலிருந்தான். சபையார் அவனுக்காக தேவனை நோக்கி இடைவிடாமல் ஜெபம் பண்ணினார்கள்."*** விசுவாசிகள் பல்வேறு இடங்களில் பல்வேறு சமயங்களில் கூடினார்கள். பலவீனமாயிருந்த மக்களுக்கு அவர்கள் உதவிச் செய்தார்கள். ஆஸ்திகளை உடையவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவினார்கள்.

இப்பொழுது மக்கள் கூடி வரும் இடத்தை திருச்சபை என்று கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் மக்கள் தான் திருச்சபை என்று வேதம் கூறுகிறது. திருச்சபை என்பது மக்கள் கூடும் கட்டிடத்தைக் குறிக்காமல் கூடி வரும் விசுவாசிகளையே குறிக்கிறது.

***வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தர் மனிதர்களின் கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசம் செய்வதில்லை.***

***"இரண்டு அல்லது மூன்று பேர் என் நாமத்தினால் எங்கே கூடுகிறார்களோ அங்கே நான் இருக்கிறேன்"*** என்று இயேசு சொன்னார். நீங்கள் ஒருமனப்பட்டு கூடி ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி கர்த்தரை ஆராதிக்க கூடி வரும்போது தேவனுடைய ஆவியானவர் விசேஷித்த முறையில் அங்கு வருகிறார். நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் என்று அறிய வேண்டும். தேவன் பரிசுத்த ஆவி மூலம் உங்கள் ஆவிக்குள் வாசம் செய்கிறார். ஆகவே நீங்கள் கூடி வரும்போதும் தனிமையாக இருக்கும்போதும் பரிசுத்த ஆவியானவரின் குரலை பகுத்தறிகிறவர்களாயிருக்க வேண்டும்.

***"உங்கள் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்று அறியாமலிருக்கிறீர்களா? நீங்கள் உங்களுக்குரியவர்களல்ல; நீங்கள் கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்கள். ஆகவே உங்கள் சரீரத்தினால் தேவனை மகிமைப்படுத்துங்கள்."***

ஏழாம் அத்தியாயத்தில் எப்படி பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் சீஷர்கள் மூலம் கிரியை செய்தாரென்றும் அவர்கள் சென்ற இடமெங்கும் தம்மை எப்படி வெளிப்படுத்தினார் என்றும் பார்த்தோம்.

இயேசு கிறிஸ்துவை உங்கள் வாழ்விலும் நடக்கையிலும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதே உங்கள் வாழ்க்கையாகும். நீங்கள் வாழ்வதெற்கென்று தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்களாய் இருக்கிறீர்கள். உங்களுக்குள் வாழும் இயேசு



கிறிஸ்துவே தேவனுக்கு உங்களை முற்றிலும் அர்ப்பணியுங்கள். இது எப்பொழுதும் எளிதாக இல்லாவிட்டாலும் எப்பொழுதும் விலை மதிப்புள்ளதாக இருக்கிறது. மற்ற கிறிஸ்தவர்களைப் போல நீங்கள் உபத்திரவப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் நீங்கள் அனுபவிக்கும் உபத்திரவங்களை விட உங்களுக்குள் காணப்படும் மகிமை மிகவும் விலையுயர்ந்தது. மாபெரிய ஊழியக்காரனின் தொடுக்கப்பட்ட வார்த்தைகளை கவனியுங்கள் :

***"நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும் எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தை பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.***

***இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண் பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். விசுவாசித்தேன் ஆகையால் பேசுகிறேன் என்று எழுதியிருக்கிறபடி நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து விசுவாசிக்கிற படியால் பேசுகிறோம்.***

***கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம். ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது." அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகள், நித்தியமானவைகள்.***

நாம் சோதனைகளையும் உபத்திரவங்களையும் சந்திக்கும் போது இந்த வசனங்களை படியுங்கள்.

***ஆகவே நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிற வருமாகிய இயேசுவை தனக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை என்னாமல் சிலுவையை சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் அவரையே நாம் நோக்குவோமாக.***

***என் சகோதரரே நீங்கள் பல விதமான சோதனைகளில் அகப்படும்போது உங்கள் விசுவாசத்தின் பரீட்சை பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.*** பொறுமை நமது கிறிஸ்தவ வாழ்வில் மிகவும் முக்கியமானது. ஆகவே பொறுமையை நாம் வளர்த்து கொள்ள வேண்டும். ஏனெனில் பொறுமையில்லாமல் நமது விசுவாசம் பரிபூரணமடையாது.

ஆகவே நன்மை செய்வதில் நாம் சோர்ந்து போகாமல் ஏற்ற காலத்தில் அதன் பலனை அறுவடைச் செய்வோம் என்று அறிந்து நம்பிக்கை இழக்காமலிருப்போமாக. நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். அதற்கு நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் பொறுமையாயிருந்தால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முடியும். தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை பெற்றுக்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்வின் அடிப்படையாக ***"அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்."*** உங்கள் சூழ்நிலைகள் எதுவாயிருப்பினும் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதை நிறுத்தக்கூடாது. அன்பின் வாழ்வையும் நிறுத்தக்கூடாது. தேவனுடைய வாக்குத்தத்தங்களை விட்டு வழிவிலகிச் செல்லக்கூடாது. உங்கள் விசுவாசம் கிரியை செய்யாதது போன்ற காலங்கள் காணப்படலாம். இந்த நேரத்தில் தான் நீங்கள் பொறுமையாயிருக்க வேண்டும். ***தீமைக்கு தீமை செய்யாமல் தீமையை நன்மையினால் வெல்லுங்கள்.***

***கடைசியாக சகோதரரே கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்படுங்கள். சத்துருவின் தந்திரங்களை எதிர்த்து நிற்கும்படி சர்வாயுத வர்க்கங்களை தரித்துக் கொள்ளுங்கள்.***

***ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் நமக்கு போராட்டமிராமல் துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. ஆகையால் தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்த்து நிற்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்னும் மார்கவசத்தை தரித்தவர்களாயும் சமாதானத்தின்***



***சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சண்யமென்னும் தலைச் சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்த சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத் தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்திருங்கள்."***

இரட்சிக்கப்படாத உலகத்திற்கு ***"நீங்கள் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாயிருக்கிறீர்கள். தேவனுடைய சேனையில் போர் வீரர்களாகவுமிருக்கிறீர்கள். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுங்கள். தேவன் உங்கள் பட்சத்திலிருந்தால் உங்களுக்கு விரோதமாக எழும்புகிறவன் யார்? உலகத்திலிருக்கிறவனிலும் உங்களுக்குள்ளிருப்பவர் பெரியவர்.***

***நீங்கள் முற்றிலும் ஜெயங்கொண்டவர்கள். உங்கள் சத்துருக்களை நேசியுங்கள். உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஆசீர்வதித்து ஜெபியுங்கள். இலவசமாய் பெற்றீர்கள். இலவசமாய் கொடுங்கள். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே உத்தமம்.***

***இயேசு சீக்கிரமாய் வருகிறார்! இயேசு சீஷர்களை நோக்கி, "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. நான் உங்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் செய்ய போகிறேன். நான் திரும்ப வந்து உங்களை நான் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வேன்.***

***நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால் மேலானவைகளையே நாடுங்கள். ஏனெனில் நீங்கள் மரித்து உங்கள் ஜீவன் கிறிஸ்துவுக்குள் தேவனுக்குள் மறைந்திருக்கிறது. கிறிஸ்துவாகிய உங்கள் ஜீவன் வெளிப்படும்போது நீங்களும் அவருடன் மகிமையில் வெளிப்படுவீர்கள்."***

# தேவனுடைய வார்த்தை



தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமம் தான் இந்த புத்தகத்தின் அடிப்படை ஆதாரமாகும். இந்த புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள எல்லா கருத்துக்களும் பரிசுத்த வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பரிசுத்த வேதாகமம் தான் தேவன் மனிதனுக்கென்று எழுதிக்கொடுத்த தேவனுடைய வெளிப்படுத்தலாகும்.

இந்த புத்தகத்தில் வேதாகமத்தின் பல்வேறு வசனங்களைப் பயன்படுத்தியுள்ளோம். வசனங்கள் மட்டும் பெரிய கருப்பு எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது. இதைப் படிக்கும்போது வசனத்திற்கு மட்டும் கவனத்தை செலுத்துங்கள். பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து வேதாகமம் தானே கூறும் சில வசனங்களை கீழே குறிப்பிடுகிறேன் :

***"வேதத்திலுள்ள எந்த தீர்க்க தரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.***



***கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறு வயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.***

***வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப் பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளாதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ள வைகளாயிருக்கிறது."***

வேத வசனங்களை எழுதும்படி தேவன் தெரிந்துகொண்ட மனிதர்களை பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படி எழுதினார்கள். வேதாகமம் மனிதனின் வார்த்தைகளாயிராமல் தேவனுடைய வார்த்தையாகும். இதை எழுதும்படி தேவன் மனிதர்களைப் பயன்படுத்தினாலும் அது ஒருபோதும் ஒழிந்து போவதில்லை. தேவன் நித்தியராக இருப்பது போல அவருடைய வசனமும் நித்தியமாகும்.

***"கர்த்தாவே உமது வார்த்தைகள் நித்தியமானவைகள். அவைகள் வானங்களில் என்றென்றைக்கும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. வானமும், பூமியும் ஒழிந்து போகும். என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.***

***புல் உதிரும், பூ உதிரும், ஆனால் கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்."***

***தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமை யுடையதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், உன்னையும் பிரிக்கத்தக்கதாகயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகள் எல்லாம் தமக்கு போதனையாக இருக்கிறது.***

தேவனுடைய வசனம் குறைவற்றது. அவருக்குள் அடைக்கல மாயிருக்கிறவர்களுக்கு அது கேடகமாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும்

ஆவியையும், கணுக்களையும், ஊழியம் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயுமிருக்கிறது.

வேத வசனங்களை நீங்கள் என்றும் படிக்க வேண்டிய முக்கிய புத்தகமாகும். இந்த புத்தகத்தை தொடர்ந்து படிக்கும்போது பெரிய கருப்பு எழுத்துக்களில் வசனங்கள் அச்சிடப்பட்டிருப்பதைக் காணலாம். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் புதிய ஏற்பாட்டை உங்களுக்கு அன்பளிப்பாக அளிக்க விரும்புகிறோம்.

“உண்மையான மகிழ்ச்சி உங்களுக்குரியது” என்ற இந்தப் புத்தகத்தில் பல்வேறு வேத வசனங்கள் காணப்பட்டாலும் இது வேதாகமம் அல்ல. எங்களுக்கு கடிதம் எழுதினால் உங்களுக்கு இலவசமாக புதிய ஏற்பாட்டை நாங்கள் அனுப்புவோம்.

அடுத்த பக்கத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்புங்கள். இந்த புத்தகத்தை இலவசமாக உங்கள் குடும்ப நண்பர்களுக்கு அன்பளிப்பாக அளிப்பதற்காக இதில் அதிகமான பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கு அந்த படிவத்தில் எத்தனை பிரதிகள் வேண்டுமென்று எழுதுங்கள். இந்த புத்தகம் உங்களுக்கு பிரயோஜனமாயிருந்தால் மற்றவர்களுக்கும் பயனுள்ளதாயிருக்கட்டும்.

இந்த புத்தகத்தில் கடைசி பக்கத்தில் இரட்சிப்பைக் குறித்து சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. இயேசுவை புதிதாக ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு உதவிச் செய்ய இது பயனுள்ளதாயிருக்கும். உங்கள் கிறிஸ்தவ வாழ்வின் மிகவும் அர்த்தமுள்ள நேரம் என்னவெனில் மற்றவர்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொள்ள உதவிச் செய்வதாகும்.

நீங்கள் பெற்றுக்கொண்ட உண்மையான மகிழ்ச்சியில் மற்றவர்களுக்கு உதவிச் செய்யும்படி கர்த்தர் உங்களை உண்மையாக ஆசீர்வதிப்பாராக!

# விண்ணப்ப படிவம்

தயவு செய்து இலவச புதிய ஏற்பாட்டையும் மற்றும் “உண்மையான மகிழ்ச்சி உங்களுக்குரியது” என்ற இந்த புத்தகத்தின் ........................................ இலவசப் பிரதிகளையும் அனுப்பவும் (எத்தனை புத்தகங்கள் வேண்டுமோ அதை விபரமாக எழுதவும்).

பெயர் : ........................................

விலாசம் : ........................................

........................................

........................................

பட்டணம் : ........................................

மாநிலம் : ........................................

பின்கோடு எண். : .................................. வயது..............................

இதைப் பூர்த்திச் செய்து கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பவும்.

**SOUTH ASIA CO-ORDINATOR**
**DenSu Ministries**
POST BOX No.: 969,
PERAMBUR BARRACKS, CHENNAI - 600 012.
E-mail : southasia@densu.com

இந்த வெப்தளத்தை பார்க்கலாம் :
http://www.densu.com

இந்த படிவத்தின் பின்புறத்தில் இப்புத்தகம் உங்களுக்கு எப்படி பயனுள்ளதாயிருந்ததென்று எழுதவும். மற்றவர்கள் கிறிஸ்துவை அறிந்துகொள்ளுவதற்கு எப்படி எங்கே இந்த புத்தகங்களை இலவசமாக கொடுப்பீர்கள் என்று பின்புறத்தில் எழுதி அனுப்பவும்.

# தேவனுடைய இரட்சிப்பின் திட்டம்



அண்ட சராசரங்களையும் படைத்த தேவன் உங்களை உண்மையான மகிழ்ச்சியுடன் வாழவும் தேவனுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொள்ளும் கொள்ளளவுடனும் படைத்தார். எப்படியோ நீங்கள் உங்கள் விருப்பத்தின் படி உங்கள் சிருஷ்டிகரை விட்டு வழி விலகிச் சென்றீர்கள்.

பிசாசாகிய சாத்தான் மனுக்குலத்தை சோதித்து, தேவனுடைய குணாதிசயங்களைக் குறித்து பொய் சொன்னான். மனிதனைப் பாவஞ்செய்ய வைத்து தேவனை நம்பக்கூடாதபடி திசை திருப்பிவிட்டான். பாவமும், பயமும், அவிசுவாசமும், கீழ் படியாமையும் மனிதனுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த உண்மையான சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் திருடிவிட்டான்.

தேவனிடமிருந்து பிரிந்த மனிதன் தனிமையிலும் வெறுமையாக காணப்பட்டான். இந்த வெறுமையை நிரப்பும்படி பல்வேறு நூற்றாண்டுகளாக மனிதர்கள் முயற்சித்தார்கள். இதில்

மதங்களும், நல்ல காரியங்களும், தீய காரியங்களும் முயற்சித்த போதிலும் ஏமாற்றம் அடைந்து வெறுமையானான். தனது சாயலில் படைக்கப்பட்ட மனிதனை நேசிப்பதை தேவன் நிறுத்தவில்லை. தேவனுடைய அநாதி திட்டத்திற்குள் மனிதன் திரும்பி வருவதற்கு இயேசு கிறிஸ்து மூலம் ஒரு வழியை ஆயத்தம் செய்தார்.

***"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்."***

***"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்" என்று இயேசு கூறினார்.***

***நாம் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை தேவன் நமக்காக பாவமாக்கினார்.***

***கிறிஸ்து நமக்காக பாடுபட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் வேத வாக்கியங்களின்படி உயிர்த்தெழுந்தார். உங்கள் பாவங்களை மன்னிக்கப்படுவதற்காக இயேசு நமக்காக மரித்தார். இதனால் அவருடன் ஐக்கியப்பட்டு, உண்மையான மகிழ்ச்சியை என்றென்றும் அனுபவிக்கலாம்.***

***"நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவுமே வந்தேன்."***

***"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதலை தருவேன். என் நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். என் நுகம் இலகுவாயும் என் சுமை மெதுவாயுமிருக்கிறது. என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் சாந்தமும் மனத்தாழ்மையுள்ளவனுமாயிருக்கிறேன்."***

***"நான் இந்த உலகத்திற்கு ஒளியாக வந்தேன். என்னை விசுவாசிக்கிறவன் இருளில் வாசம் செய்யக்கூடாது. பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்."***



***"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைப் பேர்களோ அத்தனை பேர்களும் தம்முடைய பிள்ளைகளாகும்படி அதிகாரங்கொடுத்தார்."***

***"இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்றும் இயேசுவே கர்த்தர் என்றும் உன் இருதயத்தில் விசுவாசித்து அறிக்கையிட்டால் இரட்சிக்கப்படுவாய்."***

***"கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்."***

இப்பொழுதே கர்த்தரை நோக்கி கூப்பிட்டு இரட்சிக்கப்பட்டு பின்வரும் ஜெபத்தை ஜெபியுங்கள் :

*அன்பான தேவனே,*

*இயேசு என் பாவங்களுக்காக மரித்தாரென்றும் நீர் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பினீரென்று விசுவாசிக்கிறேன். உமது குமாரனை எனக்கு தந்ததற்காக நன்றி. இப்பொழுதே நான் இயேசுவை கூப்பிட்டு என் இரட்சகராக வரும்படி அழைக்கிறேன்.*

*என் பாவங்களிலிருந்து என்னை இரட்சித்து உம்முடன் என் ஐக்கியத்தை புதுப்பித்தபடியால் உமக்கு நன்றி. உம்மை மேலும் அறியவும் உமக்கு பிரியமான வாழ்க்கை வாழவும் உதவிச் செய்யும். என் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் உம்மை நம்பி உமக்கு கீழ்படிகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே! ஆமென்!*

# உண்மையான மகிழ்ச்சி உங்களுடையது

அன்பளிக்கப்பட்டது :

..............................................................................................................................

அன்பளித்தவர் :

..............................................................................................................................

அன்பளித்தவர் விலாசம் :

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................